Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

## புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 25 இதழ் - 10 அக்டோபர் 2012

தனிப் பிரதி ரூ. 9/-

... ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி
செய்யாதவனானால், கண்ணாடியில்
தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற
மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்.
(யாக்கோபு 1: 23)

# பதினைந்தாம் வேதாகம கருத்தரங்கம்

## Fifteenth Annual Bible Lectureship

**அக்டோபர் 23,24 - 2012 (செவ்வாய், புதன்)**

**(அரசு விடுமுறை நாட்கள்)**

**கருப்பொருள் - Theme**

**" விசுவாசத்தினாலே..."** (எபிரெயர் 11 ம் அதி.)

**" By Faith..."** (Hebrews 11 Chapter)

**நேரம் : காலை 8:45 மணி - மாலை 5.00 மணி வரை**

**இடம்**

**கிறிஸ்துவின் சபை வளாகம்**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

⁕ வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்.

⁕ தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித் தனி இடவசதி உண்டு.

## ஆசானின் போதனையில்....


1. ஆசிரியர் உரை ............ 1
2. பதினைந்தாம் வேதாகம கருத்தரங்கம் ............ 9
3. ஏன் நாங்கள் மனச்சாட்சியை ஒரு பாதுகாப்பான வழிகாட்டியாக ஏற்றுக்கொள்வதில்லை ............ 10
4. பெண்கள் பகுதி ............ 14
5. வாலிபர் பகுதி ............ 16
6. சிறுவர் பகுதி ............ 19
7. நிழலும், நிஜமும் ............ 21
8. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை ............ 26
9. விசுவாசம் நம்முடைய ஜெயமாயிருக்கிறது ............ 30


✤ ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

✤ முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.

✤ இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.

✤ M.O. செய்பவர்கள் தகவலுக்கான பகுதியில் உங்கள் தெளிவான **விலாசம் & தொலைபேசி எண்ணை** கண்டிப்பாக எழுதவும்.

✤ அஞ்சல் வழியில் வேதாகம படிப்பவர்கள் உங்களது தொலை / அலை பேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

- ஆசிரியர்

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 25 OCTOBER 2012 Issue - 10**

ஆசிரியர் உரை

## ....இப்பொழுது அறிந்திருக்கிறேன்

இப்பூவுலகில் வாழும் மிகப்பெரும்பான்மையான மக்களால் அபாரமாக அறிந்து வைக்கப்பட்டிருக்கும் உன்னதமான தேவ மனிதர்களில் ஒருவராக இருப்பவர்தான் முற்பிதாக்களில் முதலாமவரும், விசுவாசிகளின் தகப்பனுமாகிய ஆபிரகாம். இங்கே, மிகப்பெரும்பான்மையான மக்கள் என்று நான் குறிப்பிடு வதற்கு காரணம் இல்லாமலில்லை. எப்படியெனில், சுமார் 2 கோடி அளவு மக்கள் தொகை கொண்டு, சரித்திரத்தின் பல்வேறு கட்டங்களில் உலகெங்கும் சிதறிப் பரவலாக வாழ்ந்து வரும் பாரம்பரியம் கொண்ட யூதர்களாலும், சுமார் 150 கோடிக்கும் மேலான மக்கள் தொகை கொண்டு உலகின் பல பகுதிகளில் வைராக்கியத்தோடு வாழ்ந்து வரும் இஸ்லாமியர்களாலும், இன்னும் சுமார் 300 கோடி மக்கள் தொகையோடு உலகெங்கும் வாழ்ந்து வரும் விதவிதமான கிறிஸ்தவ சமுதாயத்தாலும், தன் பக்தி சிரத்தைக்காகப் பெரும் மரியாதை பெற்றிருக்கும் பக்திப் பிழம்பு தான் ஆபிரகாம்.

இந்த ஆபிரகாமைத் தான், தேவன் ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்தை விட்டு, அவன் எழுபத்தைந்து வயது நிறைந்து, பிள்ளையில்லாமல் இருந்த நிலையில், "*உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ*" (ஆதி. 12:1) என்று சொன்னார். பிறகு நீண்ட காத்திருக்குதலுக்குப் பிறகு (ஆதி. 21:5) நான் உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன் என்கிற வாக்கிற்கிணங்க ஈசாக்கைத் தந்து, அவன் தன் அப்பாவித்தனத்தைக் கடக்காத பருவத்தில் (ஆதி. 22:7). அவனை பலியாகக் கொடுக்கும்படி கட்டளையிட்டு, அந்த ஆணைக்கு அடிபணிய ஆபிரகாமுக்கு மனப்போராட்டம் மலையளவு இருந்த நிலையிலும், அது தேவ

கட்டளையென்பதால் மனப்பூர்வமாய் ஏற்று, பாடுகளும், பயங்களும் பல மடங்கு இருந்தாலும், அவ்வாணையை நிறைவேற்றத் தன்னை முழுமையாய் ஈடுபடுத்தி, என்ன நடக்கும் என்று ஏதும் தெரியாத நிலையில் தன் மனதிலே ஈசாக்கை பலி செலுத்தி விட்டு (எபி. 11:17). அதைச் செயலிலே வெளிப்படுத்தும் படியாய் "தன் கையை நீட்டிக் கத்தியை எடுத்தான்". "*அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் வானத்திலிருந்து, ஆபிரகாமே, ஆபிரகாமே என்று கூப்பிட்டு ... பிள்ளையாண்டான்மேல் உன் கையைப் போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே. நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்தபடியால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்*" என்றார் (ஆதி. 22:11,12).

பரலோகத்தின் தேவன், "*நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்*" என்று கூறுவது ஏதோ வார்த்தைப் பிசகால் நேர்ந்த ஒன்று என்று எடுத்துக் கொள்ள முடியாது. ஏனெனில், தான் விரும்பாத ஒன்றை வெளிப்படுத்த அவர் நம்மைப் போன்ற ஒரு மனிதர் அல்ல. அப்படியானால், இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்பதற்குப் பலமான காரணங்கள் இருக்கவே வேண்டும். ஆம், தேவகட்டளையின்படி ஆபிரகாம் ஈசாக்கைப் பலியிட்ட அந்த நெஞ்சு நெகிழும் நிகழ்வு வெளிப்படுத்திய சில உண்மைகளை, சில தன்மைகளை, சில பக்தி லட்சணங்களை, ஆபிரகாம் சம்பந்தப்பட்ட முந்தின காரியங்கள் தெரிவிக்க வில்லையென்றே தெரிகிறது. "நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்" என்று கர்த்தர் சொன்னபோது, ஆபிரகாம் அழைக்கப்பட்டு எப்படியும் ஒரு நாற்பது ஆண்டுகள் ஆகியிருக்க வேண்டும். இந்தக் கால கட்டத்தில், விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம், தன்னை அழைத்த தேவன் மீது நம்பிக்கை கொண்டு, அவருக்காகவும், அவர் நிமித்தமும் பல பக்திக் காரியங்களை நடப்பித்துள்ளார். ஆனால், அவைகளில் எதுவும், "நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்" என்று தேவனால் சொல்லப்படுவதற்குத் தேவனுடைய பார்வையில் போதுமானதாக இருக்க வில்லையென்றே தெரிகிறது.

உதாரணமாக, தேவ அழைப்பை ஏற்று, எல்லாவற்றையும் விட்டு, முன்பின் தெரியாத ஒரு தேசத்திற்குப் போனான் அல்லவா (ஆதி. 12:1) அப்போது, "*நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்று*" தேவன் சொல்லவில்லை. அப்படிப்போகும் போது, பலிபீடம் கட்டு என்று கட்டளையிடப்படாத நிலையில் ஆபிரகாம், "கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டி" "அவரைத் தொழுது கொண்டான்" அல்லவா (ஆதி. 12:7,8). அப்போதும் தேவன் இப்படிச் சொல்லவில்லை. மேலும், தன்னால் நன்மையும், தேவ தயவும் பெற்ற, தன்னைக் காட்டிலும் வயதில் குறைந்த லோத்துவிடம், "நாம் சகோதரர்" என்கிற காரணத்தினிமித்தம் முழுமையாக விட்டுக் கொடுத்துப் பெருந்தன்மை காட்டினான் அல்லவா (ஆதி. 13 அதி.) அப்போதும் தேவன் இப்படிச் சொல்ல வில்லை. அத்தோடு, ஏற்கனவே கொடுத்த வாக்கு இன்னும் நிறைவேறாத

நிலையில், "உன் சந்ததி வானத்து நட்சத்திரங்களைப் போல் திரளாய் இருப்பார்கள்" என்று சொன்னதை மீண்டும் விசுவாசித்தான் அல்லவா (ஆதி. 15:5,6). அப்போதும் இப்படிச் சொல்லவில்லை. இன்னும், விருத்தசேதன உடன் படிக்கையை தேவன் ஏற்படுத்தின போது, அறுவைச் சிகிச்சையைப் பற்றிய எந்த ஒரு அறிவும் இல்லாத நிலையில் தன்னுடைய தொண்ணூற்றொன்பதாம் வயதில், தனக்கு விருத்தசேதனம் செய்துகொண்டு, தன்னோடிருந்த ஆண் மக்கள் எல்லோருக்கும் விருத்தசேதனம் செய்வித்தான் அல்லவா (ஆதி. 17:24,25) அப்போதும், தேவன் இப்படிச் சொல்லவில்லை.

மேற்கண்ட இந்தச் செயல்களும், சம்பவங்களும் ஆபிரகாமின் பக்திக்கு உகந்த உதாரணங்களாக இருந்தாலும், "நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்" என்று சொல்லப்படுவதற்கு போதுமானதாயிருக்க வில்லையென்றே தெரிகிறது. இங்கே எந்த ரீதியிலும் ஆபிரகாமின் பக்திச் செயல்பாடுகளை நாம் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. ஆயினும், ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுக்க முன்வந்த சம்பவம் தான் " நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் " என்பதற்குத் தேவனுடைய பார்வையில் போதுமானதாக இருந்துள்ளது!

**தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று தேவனால் கருதப்படுவதற்கு அவன் நடப்பித்த தேர்ந்த பக்திச் செயல்பாடுகளே போதுமானதாக இல்லாதபோது நம்முடைய சில்லறைச் செயல்பாடுகளெல்லாம் எங்கே நிற்கப்போகிறது?**

அருமையானவர்களே, நமக்கெல்லாம் இது நம்முடைய பக்தி வாழ்வு சம்பந்தமாக ஒருவிதமான பயத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. நாமெல்லாரும், நாம் தேவனுக்குப் பயப்படுகிறவர்களாக உள்ளோம் என்பதற்கு நாம் அவ்வப்போது நடப்பிக்கிற சின்னச்சின்ன பக்திச் செயல்பாடுகளே போதும் என்றும் அல்லது போதும் போதும் என்றும் எண்ணி வாழ்ந்து கொண்டுள்ளோம். ஆனால், உண்மை நிலைமையோ தலைகீழாய் இருக்கிறது. அப்படித்தானே? ஆபிரகாம், தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று தேவனால் கருதப்படுவதற்கு அவன் நடப்பித்த தேர்ந்த பக்திச் செயல்பாடுகளே போதுமானதாக இல்லாதபோது நம்முடைய சில்லறைச் செயல்பாடுகளெல்லாம் எங்கே நிற்கப்போகிறது? என்றைக்காவது நேரம் கிடைக்கும் போது ஆராதனையில் பங்கு பெறுவது, நோய், நொடி வந்தால் ஜெபிப்பது, பொழுதே போகவில்லையென்றால் வேதாகமத்தை எடுத்துப் படிப்பது, பிச்சைக்காரனுக்குக் கொடுப்பது போன்று கைக்கு வந்ததைக் காணிக்கையாகக் கொடுப்பது, சுவிசேஷத்தின்படியான இரட்சிப்பு, நடைமுறைப் பக்தி வாழ்வு, பரலோகம் போன்றவற்றைப் பற்றி எவ்வித அக்கறையும் இல்லாமல் இருப்பது போன்றவைகளெல்லாம் தேவனுடைய பார்வையில் நம்மை எப்படியாகப் பார்க்கும்படி செய்யும் என நினைக்கிறீர்கள்.

தேவனுடைய பார்வையில் ஒருவன் தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று கருதப்படாத நிலையில், தேவ ஆசீர்வாதம் என்பது கானல் நீராகவே இருக்கும். ஆபிரகாமை தேவன் அழைத்த போதும், அந்த அழைப்பை ஏற்று ஆபிரகாம் தன் பக்திக் காரியங்களை நடப்பித்துக் கொண்டிருந்த போதும், அவனுக்குப் பலவித

ஆசீர்வாதங்கள் கொடுக்கப்படும் என்று தான் வாக்களிக்கப்பட்டுள்ளது. அதாவது, இனிவரும் காலங்களில் கொடுக்கப்படும் என்று தான் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்று சொல்லப்பட்டதற்குப் பிறகு, "*....கர்த்தர் ஆபிரகாமைச் சகல காரியங்களிலும் ஆசீர்வதித்து வந்தார்*" (ஆதி. 24:1) என்று வசனம் கூறுகிறது. அப்படியானால், தேவ ஆசீர்வாதம் எதோடு சம்பந்தப்பட்டிருக்கிறதென்று உங்களுக்குப் புரிகிறதா? நாம் நமக்குத் தேவையான ஆசீர்வாதங்கள் இல்லாதவர்களாக ஏன் உள்ளோம் என்று இப்போதாவது விளங்குகிறதா?.

சரி, ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்ததற்குப் பிறகே, " நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் " என்று தேவன் சொல்லு கிறபடியால், ஆபிரகாமின் மற்ற பக்திச் செயல்பாடுகளில் காணப்படாத என்னென்ன சிறப்புத் தன்மைகள் இச்சம்பவத்தில் காணப்படுகிறதென்றும், அவைகளிலிருந்து நமக்கு எப்படிப்பட்ட பாடங்கள் கிடைக்கிறதென்றும் தெரிந்து கொள்ள முயற்சிப்போம்.

## I. ஆபிரகாம் செவி கொடுக்கிறவனாயிருந்தான் (ஆதி. 22:1,2)

" நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் " என்று கர்த்தருடைய தூதனால் சொல்லப்பட்டதற்கான காரணங்களில் ஒன்றாக முதலாவது நமக்குத் தெரிவது, ஆபிரகாமின் செவி கொடுக்கும் குணம்.

பொதுவாகவே, ஒரு மனிதன் ஒரு காரியத்தைச் செம்மையாய்ச் செய்வதற்கு, அந்தக் காரியம் சம்பந்தமாக என்ன சொல்லப்படுகிறதோ அதை கவனிக்க வேண்டியது முக்கியம். தேவ காரியத்திலும் இது உண்மையாகவே உள்ளது. இஸ்ரவேலின் முதல் ராஜாவாகிய சவுல், தேவன் சொன்னதைக் கேட்க வேண்டிய விதத்தில் கேட்காமல், தேவ கட்டளையை மீறிப் பாவம் செய்த போது சாமுவேல் தீர்க்கனைக் கொண்டு எப்படி இடித்துரைக்கப்பட்டான் என்று கவனியுங்கள். " *அதற்குச் சாமுவேல்: கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்கு மோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக் கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்*" (1 சாமு. 15:22) என்று. **செவி கொடுத்தல்** உத்தமம் என்று பரிசுத்த ஆவியானவர் விளம்புவதைக் கவனியுங்கள். சவுல் தேவ கோபத்திற்கு ஆளாகி, கொடுக்கப்பட்ட மேன்மையான ஆசீர்வாதத்தை இழந்து போனதற்குக் காரணம் அவன் செவி கொடுக்காமல் போனது தான்.

ஆனால், ஆபிரகாம் செவி கொடுக்கிறவனாக இருந்துள்ளான். அவனுக்குச் சொல்லப்பட்ட காரியங்கள் என்ன சாதாரணமானவைகளா? "*.... உன் புத்திரனும், உன் ஏகசுதனும், உன் நேச குமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக் கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின் மேல் அவனைத் தகனபலியிடு*" என்றார் (ஆதி. 22:1,2). இந்த வார்த்தைகளுக்கு ஆபிர்காம் செவி கொடுத்துள்ளான் என்பதை நம்புவதற்கே கடினமாக உள்ளது. நாமாக இருந்திருந்தால் என்ன செய்திருப்போம்?

**பெந்தெகொஸ்தே நாளில் 3000 பேர் இரட்சிப்படைந்ததற்கான காரணங்களில் ஒன்று அவர்கள் செவி கொடுத்தது தான். அவர்கள் செவி கொடுக்காமலிருந்திருந்தால் இன்றைக்கு நாம் அப்பிரசங்கம் பற்றிப் பேச வேண்டிய அவசியமே இருந்திருக்காது.**

ஸ்தேவானுடைய பிரசங்கத்தைக் கேட்டவர்கள் போல் நம்முடைய காதுகளை அடைத்துக்கொண்டு (அப். 7:57) ஒன்றும் தெரியாதவர்கள் போல் இருந்திருப் போம். ஆமாந்தானே.

அருமையானவர்களே! நம்முடைய பக்தி வாழ்க்கையில் தேவனுக்குப் பிரியமானதை நடப்பிக்கச் செவி கொடுத்தல் மிகவும் அவசியம். பெந்தெகொஸ்தே நாளில் 3000 பேர் இரட்சிப்படைந்ததற்கான காரணங்களில் ஒன்று அவர்கள் செவி கொடுத்ததுதான். அவர்கள் செவி கொடுக்காமலிருந்திருந்தால் இன்றைக்கு நாம் அப்பிரசங்கம் பற்றிப் பேச வேண்டிய அவசியமே இருந்திருக்காது. அங்கே, பேதுரு அப்போஸ்தலன் பிரசங்கத்தை ஆரம்பித்த விதத்தைப் பாருங்கள். "*அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று, அவர்களை நோக்கி, உரத்த சத்தமாய்; யூதர்களே எருசலேமில் வாசம் பண்ணுகிற ஜனங்களே நீங்க ளெல்லாரும் அறிந்து கொள்வீர்களாக, என் வார்த்தைகளுக்குச் செவி கொடுங்கள்*" (அப். 2:14) செவி கொடுக்காமல் இருந்திருந்தால், அன்றைய தினம் 3000 பேர் இரட்சிப்படைந்திருக்க முடியுமா? ஆகவே, நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய கட்டளைகளுக்கும், கிறிஸ்துவின் உபதேசங்களுக்கும் கீழ்ப்படியும் படியாய் முதலாவது அவைகளுக்குச் செவி கொடுக்கிறவர்களாயிருப்போம். ஒருவேளை அவை எவ்வளவு கடினமானதாக, சவால் நிறைந்ததாக இருந்தாலும் ஆபிரகாமைப் போல நாம் முதலாவது செவி கொடுப்போம்.

## II. ஆபிரகாம் துரிதமாய்ச் செயல்படுகிறவனாயிருந்தான் (வசனம் 22:3)

" நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் " என்று கர்த்தருடைய தூதனால் சொல்லப்பட்டதற்கான காரணங்களில் இரண்டா வதாக நமக்குத் தெரிவது, சொல்லப்பட்டதை நிறைவேற்றுவதற்கான ஆபிரகாமின் துரிதச் செய்லபாடு.

எப்பொழுதுமே ஒரு செயலை நிறைவேற்றுவதில், அந்தச் செயல் சம்பந்தமான சாதக பாதகங்கள் முக்கியப்பங்கு வகிக்கும். இது பொதுவான ஒன்று தான். சாதகமாகவும், நன்மையாகவும் இருந்தால் வேகமான நடவடிக்கைகள் அங்கே இருக்கும். பலன் பாதகமாகவும், விளைவு தீமையாகவும் தெரியுமானால் தேவையற்ற தாமதமும், இழுத்தடிப்பும் காரணமின்றி இருக்கும். இதை யாராலும் மறுக்க முடியாது. ஆனால், நம்முடைய ஆபிரகாம் இந்தப் பொதுவான கோட்பாட்டிற்கு விதிவிலக்கானவனாக இருந்துள்ளான். ஆம், தேவன் கட்டளை யிட்டதை நிறைவேற்றும்படி ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து, தன் கழுதையின்

மேல் சேணங்கட்டி, தன் வேலைக்காரரில் இரண்டு பேரையும் தன் குமாரன் ஈசாக்கையும் கூட்டிக் கொண்டு, தேவன் தனக்குக் குறித்த இடத்திற்குப் புறப்பட்டுப் போனான் (ஆதி. 22:3).

ஆபிரகாமுக்குச் சொல்லப்பட்டவைகள் என்ன லேசான காரியமா? எளிதில் சீரணிக்கக் கூடிய ஒன்றா? அல்லது போகிறபோக்கிலே தான் அவைகளை எடுத்துக் கொள்ள முடியுமா? சொல்லுங்கள். நினைத்தால் குலையெல்லாம் நடுங்குகிறது. இந்த ஆபிரகாம் என்ன மனிதனோ தெரியவில்லை! கர்த்தர் சொன்னதை நிறைவேற்ற அதிகாலையில் புறப்பட்டு விட்டான். கர்த்தர் கட்டளையிட்டது மாலை நேரமாயிருந்தபடியால் விடியும் வரை காத்திருப்பானோ? கட்டளையிட்டது காலை நேரமாயிருந்திருந்தால் அதிகாலை வரைக்கும் கூட காத்திருக்காமல் உடனடி யாகப் புறப்பட்டிருந்திருப்பானோ? யாருக்குத் தெரியும்? இந்த மாமனிதனின் செயல்பாடு நம்முடைய அறிவுக்கா எட்டுகிறது?. எப்படியோ ஆபிரகாம் தேவ கட்டளையை நிறைவேற்ற அதிகாலையில் எழுந்து கொண்டான் என்பது நமக்கு வெளிப்படுத்தப்பட்ட ஒன்றாக உள்ளது. அவன் எவ்விதக் காலதாமதமும் செய்யவில்லை.

கால தாமதம், அதிலும் குறிப்பாக கர்த்தரின் காரியத்தில் காலதாமதம் எப்போதும் நன்மையானதை நடப்பிப்பதில்லை. அதற்கு மிகச் சிறந்த உதாரணம் ஆளுநர் பேலிக்ஸ். அப்போஸ்தலன் பவுல் ஒரு சமயம் இவனுக்கு முன்பாக விசாரணைக் கைதியாக நின்று *" நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத் தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில், பேலிக்ஸ் பயமடைந்து; இப்பொழுது நீ போகலாம். எனக்குச் சமயமான போது உன்னை அழைப்பிப்பேன்"* என்றான் (அப். 24:25). இப்படிச் சொல்லி தேவ் காரியத்தில் உடனடியாகச் செயல்படும் வாய்ப்புக் கிடைத்தும் செயல்படாமல் கால தாமதம் செய்தான். ஆனால், இவனுக்கு மறுபடியும் சமயம் கிடைத்ததாக நாம் வேதாகமத்தில் எங்கும் காண முடிய வில்லை. இவன் துரிதமாய்ச் செயல்பட்டிருந்தால், தன் ஆத்துமாவை இரட்சித்து, நித்திய அழிவிலிருந்து தன்னைக் காப்பாற்றியிருக்க முடியும். "இவனைக் காலதாமதத்தின் தகப்பன்" என்றும், லோத்தின் மனைவியைக் "கால தாமதத்தின் தாய்" (ஆதி. 19:16) என்றும் சொன்னால் தவறில்லையோ!

**தேவ கட்டளைகளைக் கேட்டு, அவைகளை ஏற்றுச் செயல்படுகிற காரியத்தில் நாம் துரிதமானவர்களாக உள்ளோமோ அல்லது தாமதிக்கிறவர்களாக உள்ளோமா?**

அப்படியானால், அருமையானவர்களே, தேவ காரியத்தில் நம்முடைய செயல்பாடு எந்தளவில் உள்ளது? தேவ கட்டளைகளைக் கேட்டு, அவைகளை ஏற்றுச் செயல்படுகிற காரியத்தில் நாம் துரிதமானவர்களாக உள்ளோமோ அல்லது தாமதிக்கிறவர்களாக உள்ளோமா? அப்போஸ்தலன் பவுலடியார் புகழ் பெற்ற மார்ஸ் மேடையின் மீது நின்று அத்தேனருக்குச் செய்த பிரசங்கத்தின் ஒரு வசனத்தை இங்கே கவனியுங்கள். " *அறியாமையுள்ள காலங்களைத் தேவன்*

*காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்* " (அப். 17:30). மனந்திரும்பி, இரட்சிப்படைய வேண்டுமென்பது தேவ கட்டளையாயிருக்கிறது. இத்தேவ கட்டளையை ஏற்று செயல்படுகிற காரியத்தில் நாம் என்ன செய்து கொண்டுள்ளோம்? ஆபிரகாம் துரிதமாய்ச் செயல்பட்டான் என்று அவனை வாயாரப் புகழ்ந்து விட்டு, நீதியை நடப்பிப்பதில் நாம் காலம் கடத்துகிறவர்களாக உள்ளோமா? சமயமும், சந்தர்ப்பமும் எப்போதும் நம் கதவைத் தட்டிக் கொண்டே இருக்காது. "*அநுக்கிரக காலத்திலே நான் உனக்குச் செவி கொடுத்து, இரட்சணிய நாளிலே உனக்கு உதவி செய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே; இதோ, இப்பொழுததே அநுக்கிரககாலம் இப்பொழுதே இரட்சணிய நாள்*" (II கொரி. 6:2) என்ற சிந்தையோடு தேவனுக்கடுத்த காரியங்களை நாம் நடப்பிக்கிறவர்களாக இருப்போம்.

## III. ஆபிரகாம் முழு நம்பிக்கை கொண்டவனாயிருந்தான் (வசனம் 8)

" நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்" என்று கர்த்தருடைய தூதனால் சொல்லப்பட்டதற்கான காரணங்களில் மூன்றாவதாக நமக்குத் தெரிவது, அவன் தேவன் மீது கொண்டிருந்த முழுமையான நம்பிக்கை.

தேவன் மீது நம்பிக்கை வைப்பதில் இரண்டு நிலைகள் உள்ளது. ஒன்று, எல்லாம் நம்முடைய நினைப்பின்படியாகவும், திட்டத்தின்படியாகவும் நடக்கும் போது வைக்கும் நம்பிக்கை. இன்னொன்று, எல்லாம் தாறுமாறாகவும், எதிராகவும் நடக்கும் போது வைக்கும் நம்பிக்கை. இது பொதுவான ஒன்று. முதல் வகை நம்பிக்கை பெரும்பாலும் யாருக்கும் பிரச்சினையாக இருக்காது. ஏனெனில், இந்த நம்பிக்கையில் சிரமம் ஏதுமில்லை. ஆனால், இரண்டாவது வகை நம்பிக்கை அப்பப்பா, அது எல்லோராலும் முடிகின்ற ஒன்றல்ல. இதற்குத் தேவனைப் பற்றிய ஆழ்ந்த அறிவும், அவருடைய வழி நடத்துதல் பற்றி உறுதியான பிடிப்பும் வேண்டும். இதற்குப் பக்தன் யோபு ஒரு மிகச் சிறந்த உதாரணம். "*அவர் என்னைக் கொன்று போட்டாலும், அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன்; ஆனாலும் என் வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம் பண்ணுவேன் என்றான்*" (யோபு. 13:15). இப்படிப்பட்ட நம்பிக்கை எப்பொழுதும் ஏட்டளவில் தான் இருக்க வேண்டுமா? நம்முடைய அன்றாட பக்தி வாழ்க்கையில் இருக்கக்கூடாதா? சிந்திப்போம்.

யோபுவுக்கு இருந்த அதே விதமான நம்பிக்கை, முழுமையான நம்பிக்கை தான் அங்கே ஆபிரகாமுக்கு இருந்தது. இங்கே வசனத்தைப் பாருங்கள். "*அப்பொழுது ஈசாக்கு தன் தகப்பனாகிய ஆபிரகாமை நோக்கி; என் தகப்பனே என்றான்; அதற்கு அவன்; என் மகனே, இதோ, இருக்கிறேன் என்றான்; அப்பொழுது, அவன்: இதோ, நெருப்பும், கட்டையும் இருக்கிறது, தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே என்றான். அதற்கு ஆபிரகாம் என் மகனே, தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக் குட்டியைப் பார்த்துக் கொள்வார் என்றான்*" (ஆதி. 22:7,8). அவ்வளவு தான், " தேவன் பார்த்துக்கொள்வார் ". என்னே நம்பிக்கை!! இதுவல்லவா விசுவாசம்!!! ஒருவேளை, ஆபிரகாம், தேவன் பேரில்

முழுமையான நம்பிக்கை வைக்காதவனாய் இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்? "தகன பலிக்கான ஆட்டுக்குட்டி எங்கே என்ற ஈசாக்கின் கேள்வி, ஆபிரகாமை ஓர் உலுக்கு உலுக்கி தேவனுடைய ஒட்டுமொத்த திட்டத்தையே துவம்சம் செய்திருக்கும் ".

ஆம், அந்திய காலத்தில் பெற்றெடுத்த நேச குமாரன் அப்பாவித்தனமாக இப்படி ஒரு கேள்வியைக் கேட்கும் போது எந்தத் தகப்பனால் அதைத் தாங்கிக் கொள்ள முடியும்? அடிமைப் பெண்ணாகிய ஆகாருக்குப் பிறந்த இஸ்மவேலின் பிரிவையே தாங்க முடியாதவன் தானே இந்த ஆபிரகாம் (ஆதி. 21:10). அப்படிப் பட்டவன் வாக்குத்தத்தத்தின் குமாரன், ஆட்டுக்குட்டி எங்கே என்று கேட்டபோது சும்மாவா இருந்திருப்பான்? அவன் எப்படித் துடியாய்த் துடித்திருப்பான் என்பதைத் துல்லியமாக விளக்க எனக்குப் போதுமான அறிவில்லாதபடியால் உங்கள் யூகத்துக்கே விட்டுவிடுகிறேன். "விசுவாசிகளின் தகப்பன்" என்னும் ஒரு சிறப்பு மட்டும் இந்த ஆபிரகாமுக்குப் போதவே போதாது என்று நான் திடமாய் நம்புகிறேன்.

அருமையானவர்களே, ஈசாக்கைப் பலியிட ஒப்புக் கொடுத்த போது ஆபிரகாம் கொண்டிருந்த நம்பிக்கை, முழுமையான நம்பிக்கை, அபார நம்பிக்கை தான் இன்றைக்குத் தேவனைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லக் கூடிய ஒவ்வொருவரிடத்திலும் தேவைப்படுகிறது. நம்முடையதை இழந்து போகிற நிலையிலும், தேவன் பேரில் பற்றுதலாயிருப்பது தான் நம்பிக்கை. ஆபிரகாம், இன்னும் சிறிது நேரத்தில் தன் நேச குமாரன் இல்லை என்ற நிலையிலும் முழுமை யான நம்பிக்கை கொண்டிருந்தான். "உன் நம்பிக்கை வீண் போகாது" (நீதி. 23:18) என்று சொல்லும் தேவன், ஆபிரகாமின் நம்பிக்கைக்குக் காலத்தால் அழிக்க முடியாத பலனைத் தந்தார். " *நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்* " என்று.

இப்படிப்பட்ட நம்பிக்கை தான் நம் ஒவ்வொருவரிடமிருந்து தேவனால் எதிர் பார்க்கப்படுகிறது. நாம் தேவனுக்குப் பயப்படுகிறவர்களாக தேவனுடைய பார்வையில் காணப்பட இப்படிப்பட்ட நம்பிக்கை அவசியம். அப்போஸ்தலன் பவுலுக்கு இதையொத்த நம்பிக்கை அவனுடைய ஊழியத்தின் பாதையில் இருந்தது. ஆகவே தான், கொரிந்தியருக்கு இப்படியாக எழுதியுள்ளார். " *நாங்கள் எங்கள் மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவ்ன் மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம். அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார். இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்* " (II கொரி. 1:10) என்றார்.

அன்பானவர்களே, இப்படிப்பட்ட நம்பிக்கை நம்மில் இருந்தால் தான், தேவனுடைய பார்வையில் ஆபிரகாம் போல் அவருக்குப் பயப்படுகிறவர்களாக இருப்போம். இப்படிப்பட்ட பயம் தான் நாம் ஆபிரகாம் போல் தேவனுடைய கட்டளைகளை அட்சரம் பிசகாமல் கைக்கொள்ளும்படி செய்யும். அப்படிக் கைக் கொள்ளுகிறவர்கள் தான் நியாயத்தீர்ப்பில் வெற்றி பெற்று (யோவான் 12:48) மறுமையை பேரின்பமான பரலோகில் கழிக்க முடியும்.

இப்படிப்பட்ட பாக்கியம் உங்கள் ஒவ்வொருவருக்கும் கிடைப்பதாக! ஆமென்!!

ஜெபியுங்கள் ! திட்டமிடுங்கள்!! பங்கு பெறுங்கள் !!!

EKKLESIA BIBLE COLLEGE
PROCLAIM THE GOSPEL
KANGAYAM - 638 701, INDIA.

**காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும்,**
**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டமும்**
**இணைந்து நடத்தும்**

# பதினைந்தாம் வேதாகம கருத்தரங்கம்

## FIFTEENTH ANNUAL BIBLE LECTURESHIP

**நாள்**

**அக்டோபர் 23,24 - 2012 (செவ்வாய், புதன்)**

**(அரசு விடுமுறை நாட்கள்)**

**கருப்பொருள் - THEME**

**" விசுவாசத்தினாலே..."** (எபிரெயர் 11 ம் அதி.)

**" By Faith..."** **(Hebrews 11 Chapter)**

**நேரம் : காலை 8:45 மணி - மாலை 5.00 மணி வரை**

**இடம்**

## கிறிஸ்துவின் சபை வளாகம்

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

⁕ வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்.


⁕ தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித் தனி இடவசதி உண்டு.

*தொடர்பு முகவரி*

## கிறிஸ்துவின் சபை

288, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385, 98652 - 90572



# ஏன் நாங்கள் மனச்சாட்சியை ஒரு பாதுகாப்பான வழிகாட்டியாக ஏற்றுக்கொள்வதில்லை

## J.C. சோட்

மனச்சாட்சி என்கிற வார்த்தை ஒரு மனிதனுடைய இருதயம், மனது மற்றும் ஆத்துமாவோடு சம்மந்தப்பட்டது. இதன் பொருள், ஒருவர் தான் சேகரித்த ஒரு குறிப்பிட்ட அளவு தகவலையும், அறிவையும், வேறொன்றோடு ஒப்பிட்டுப் பார்த்து, அது சரியா, தவறா என்று தீர்மானிக்கப் பயன்படுத்துவது. இது தான் மனச் சாட்சி. அந்தத் தகவல் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கலாம் அல்லது பொய்யான அறிக்கைகளை ஆதாரமாகக் கொண்டதாகவும் இருக்கலாம். அது உண்மையாக இருந்தாலும் சரி, பொய்யாக இருந்தாலும் சரி, ஒருவேளை அது உண்மையென ஏற்றுக்கொள்ளப்பட்டு, பின்பு அது ஒரு வழி காட்டியாக பயன்படுத்தப்படும். மனச்சாட்சியானது ஒரு பாதுகாப்பான வழி காட்டியாக இருக்க முடியும் என உணர்பவர்களும் இருக்கத் தான் செய்கிறார்கள். மற்றவர்கள், ஓர் நல்மனச்சாட்சியைப் பெற்றருப்பதைக் குறித்துப் பேசுகிறார்கள். மேலும், அவர்களுக்கு நல்மனச்சாட்சி இருப்பதால் தாங்கள் சரியாக இருப்பதாக உணர்கிறார்கள். இருப்பினும், தான் நல்மனச்சாட்சியைப் பெற்றிருப்பதாக ஒருவர் எண்ணி, தான் சத்தியத்தைப் பெற்றுக் கொண்டதாக நினைத்துக் கொண்டு வஞ்சிக்கப்பட வாய்ப்புண்டு. அப்படியென்றால், அவருடைய நல்மனச்சாட்சி யானது உண்மையை அடிப்படையாகக் கொண்டதாக இல்லாமல், தவறை அடிப்படையாகக் கொண்டதாகிறது. எனவே, ஒருவர் ஒன்று சரியா, தவறா என்பதைத் தீர்மானிக்க, இறுதி அதிகாரமாக இருக்க மனச்சாட்சியை வழி காட்டியாக அனுமதிக்க முடியாது.

ஒருவருடைய மனச்சாட்சி நம்பத்தகுந்ததாக இருக்க வேண்டுமானால் அது உண்மையை அடிப்படையாக கொண்டதாக இருக்க வேண்டும். வேறுவிதமாகச் சொன்னால், உண்மை அல்லது சத்தியமாகிய தேவனுடைய வார்த்தையில் மனச்சாட்சி ஆளுகை செய்யப்பட வேண்டும். ஒருவருடைய மனச்சாட்சி தவறை அடிப்படையாக வைத்து இருக்குமானால், அது ஒரு பாதுகாப்பான வழிகாட்டியாக இருக்க முடியாது.

நாம் தேவனுடைய வார்த்தைக்குத் திரும்பும் போது, நாம் என்ன பேசிக் கொண்டிருக்கிறோமோ அதற்கு ஓர் நல்ல உதாரணம் சவுல்தான். முதலாவதாக சவுல், ஒரு யூதன் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அவன் யூதமார்க்கத் தைப் பின்பற்றினவர். அவர் தன்னுடைய மார்க்கத்தைக் குறித்து பக்தி வைராக்கி யமுள்ளவராயிருந்தார். அந்த மார்க்கத்திற்கு கிறிஸ்தவம் எதிரியாக இருந்தது என அவர் நினைத்தார். அதன் விளைவாக, கிறிஸ்தவர்களை துன்பப்படுத்தும்படி புறப்பட்டுச் சென்றார். அவரைப் பற்றி நாம் இவ்விதமாக வாசிக்கிறோம். “ *சவுல் வீடுகள் தோறும் நுழைந்து, புருஷரையும், ஸ்திரீகளையும் இழுத்துக் கொண்டு போய்,*

*காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான்"* (அப். 8:3) தொடர்ந்து, நாம் இப்படி வாசிக்கிறோம். "*சவுல் என்பவன் இன்னும் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய்; இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டுபிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டு வரும்படி, தமஸ்கு விலுள்ள ஜெப ஆலயங்களுக்கு நிருபங்களை கேட்டு வாங்கினான்"* (அப். 9:12).

இச்சம்பவத்தை நாம் தொடர்ந்து வாசிக்கையில் சவுலும், அவனுடைய கூட்டாளிகளும் தமஸ்குவுக்கு சென்று கொண்டிருக்கும் போது கர்த்தர் அங்கே தரிசனமானார், "*அப்போது சவுல் தரையிலே விழுந்தான். அப்பொழுது சவுலே, சவுலே நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அதற்கு அவன்; ஆண்டவரே, நீர் யார் என்றான். அதற்குக் கர்த்தர் நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். அவன் நடுங்கித் திகைத்து, ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர் நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்"* (அப். 9:4-6). சொல்லப்பட்டிருக்கும் காரியங்களை நாம் தொடர்ந்து படிக்கும்போது, அனனியா என்னும் பேர்கொண்ட ஒரு சுவிசேஷப் பிரசங்கியார் சவுலினிடத்தில் வந்து, "*நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு*" என்றான் (அப். 22:16). இப்போது பவுல் என்ன செய்தார்? கிறிஸ்துவில் விசுவாசியாகி தன்னுடைய பாவங்களிலிருந்து மனந் திரும்பி, கிறிஸ்துவை ஆண்டவரென்று ஒத்துக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றான். இதைச் செய்து விட்டு, தாமதமின்றி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான் (அப். 9:20)

ஆனால், அவர் கிறிஸ்வதனாவதற்கு முன்பு உருண்டோடிய அந்த வருடங்கள் எப்படி? தான் செய்தவைகளில் அவர் உண்மையாகவும், நேர்மை யாகவும் இருந்தாரா? அவைகள் எல்லாவற்றையும் தான் ஏன் செய்தேன் என்பதற்கு அவரே கூறுவதைக் கேளுங்கள். "*முன்னே நானும் நசரேயனாகிய இயேசுவின் நாமத் திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்க வேண்டு மென்று நினைத்திருந்தேன். அப்படியே நான் எருசலேமிலும் செய்தேன். நான் பிரதான ஆசாரியர்களிடத்தில் அதிகாரம் பெற்று, பரிசுத்தவான்களில் அநேகரைச் சிறைச்சாலைகளில் அடைத்தேன்; அவர்கள் கொலை செய்யப்படுகையில் நானும் சம்மதித்திருந்தேன், சகல ஜெப ஆலயங்களிலும், நான் அவர்களை அநேகந்தரம் தண்டித்து, தேவதூஷணஞ் சொல்லக் கட்டாயப்படுத்தினேன்; அவர்கள் பேரில் மூர்க்கவெறி கொண்டவனாய் அந்நிய பட்டணங்கள் வரைக்கும் அவர்களைத் துன்பப்படுத்தினேன்"* (அப். 26:9-11).

இவைகளெல்லாம், சவுல் சபையை துன்பப்படுத்திய நாட் களில் நல்மனச் சாட்சியோடு தான் அவைகளைச் செய்திருக்கிறார் என்றே சொல்கின்றது. அவர் தான் செய்தவைகளில் உண்மை யாவும், நேர்மையாகவும் இருந்திருக்கிறார். அவர், தான் செய்தவைகளைப் பற்றி நன்றாகவே உணர்ந்திருக்கிறார் என்பதில்

எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், உண்மை என்னவென்றால், அவருடைய மனச்சாட்சி, இவர் தேவன் என்ன செய்ய விரும்பினாரோ அதன்படி செயல் படாமல் அவர் எதைச் சரி என தன் மனதில் எண்ணினாரோ அதனடிப்படையில் செயல்பட்டது. ஆனால், இவர் சத்தியத்தைக் கற்றுக் கொண்டு, அதற்குக் கீழ்ப்படிந்த பிறகே இவர் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டார்.

சவுலின் மனமாற்றத்திற்குப் பிறகு இவர் பெயர் பவுல் என மாற்றப்பட்டது. சில காலத்திற்கு பிறகு, அவர் இப்படி எழுதினார் "*என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென் றெண்ணி இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்தரிக்கிறேன். முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமை செய்கிற வனுமாயிருந்தேன்; அப்படியிருந்தும் நான் அறியாமல் அவிசுவாசத்தினாலே அப்படிச் செய்தபடியினால் இரக்கம் பெற்றேன். நம்முடைய கர்த்தரின் கிருபை கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தோடும், அன்போடுங்கூட என்னிடத்தில் பரிபூரணமாய்ப் பெருகிற்று. பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமு மானது; அவர்களில் பிரதான பாவி நான். அப்படியிருந்தும், நித்திய ஜீவனை அடையும்படி இனிமேல் இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருப்பவர் களுக்குத் திருஷ்டாந்தம் உண்டாகும் பொருட்டுப் பிரதான பாவியாகிய என்னிடத்தில் அவர் எல்லா நீடிய பொறுமையையும் காண்பிக்கும்படிக்கு இரக்கம் பெற்றேன். நித்தியமும், அழிவில்லாமையும், அதரிசனமுமுள்ள ராஜனுமாய் தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு கனமும், மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக, ஆமென்* " (I தீமோத். 1:12-17).

மேற்சொல்லப்பட்டுள்ள வசனப்பகுதியில் பவுல் எல்லா விஷயங்களிலும் தான் நல்மனச்சாட்சியோடே தேவனுக்கு முன்பாக நடந்து வந்ததை நினைவுப் படுத்துகிறார் (அப். 23:1). ஆயினும், பவுல் தன்னுடைய முந்தைய வருடங்களை தேவனோடும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் போர் செய்கிறவராய்ச் செலவிட்டதோடு, சபையைத் துன்பப்படுத்துவதிலும் செல விட்டுள்ளார். அதன் பின்பு சத்தியத்தைக் கற்றுக்கொண்டு, தானாகவே கிறிஸ்த வனாவதற்கு தேவனுக்கு கீழ்ப்படிந்த பிறகு, பாவிகளில் பிரதான பாவியாகிய தானே இரட்சிக்கப்பட முடியுமானால் தேவனுடைய இரக்கமும் கிருபையும் எவ்வளவு பெரியது என்பதை உணர்ந்து பார்த்தார். அவர் ஒருபோதும் தன்னுடைய கடந்த காலத்தை மறக்கவில்லை. ஆனால், அதை முன்னானவைகளை நோக்கி கடந்து செல்வதற்கு ஒரு ஊக்கியாக இருக்க அனுமதித்து, கடந்த காலத்தில் நடந்தவை களை ஈடுகாட்டுவதற்கு தன்னால் முடிந்த வரை எல்லாவற்றையும் செய்தார். அது மட்டுமல்ல, கிறிஸ்துவின் நாமத்தை பறைசாற்றுவதற்கு தன் வாழ்நாள் முழுவதை யும் கொடுத்தார்.

என் நண்பர்களே, தேவன் நல்மனசாட்சியை மட்டும் ஒருவரிடம் எதிர்பார்த்தால், அதன் பொருட்டு எல்லா மதங்களிலுமுள்ள ஜனங்களும் நல்மனச் சாட்சி உடையவர்களாயிருந்தால் அவர்களும் இரட்சிக்கப்பட முடியும் என்றாகி

விடும். அப்படியென்றால், எல்லா சபைகளின் எல்லா ஜனங்களும் இரட்சிக்கப் படுவார்கள். ஜனங்கள் தேவனை விசுவாசித்தாலும், விசுவாசிக்காவிட்டாலும் அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்று பொருள்படும். மேலும், ஒருவர் தன் நல்லொழுக்க வாழ்க்கை அல்லது நற்கிரியைகளின் அடிப்படையில் இரட்சிக்கப்பட முடியும் என்றும் பொருள்படும். இது ஒருவர் கிறிஸ்தவனாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, ஒருவர் தேவனிடத்தில் உண்மையுள்ளவர்களாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி எல்லோரும் இரட்சிக்கப்படுவார்கள் என்று பொருள்பட்டு விடும். எல்லா ஜனங்களுக்கும் தங்கள் எண்ணங்கள் செயல்பாடுகள், மதங்கள் போன்றவைகளை கடைசியாக நியாயப்படுத்தும் மனப்பான்மை உண்டு. அவர்கள் மனசாட்சியில் சூடுண்டவர்களைப் போலாகலாம் அல்லது தங்களுடைய மனச்சாட்சி அவர்களை உறுத்தும் வரை தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாகப் போகலாம் (I தீமோ. 4:1-5). இது இறுதியில் நல்மனச்சாட்சியைக் கொண்டு வரும்.

அப்படியானால், நல்மனச்சாட்சி மட்டுமே இதற்குப் பதில் அல்ல. வெறுமனே நல்மனச்சாட்சி ஒருவருடைய இரட்சிப்புக்கு எந்த உத்திரவாதமும் கொடுக்காது. ஒருவர் தன்னுடைய மனச்சாட்சி தேவனுடைய சித்தத்தின் அறிவை ஆதாரமாகப் பெற்றிருக்கும் போது தான், அது சரியாக இருப்பதாக நம்ப முடியும். அப்போது ஒருவருடைய எண்ணங்கள், செயல்பாடுகள், ஏன், அவர்கள் வாழ்க்கையே தேவனுடைய வார்த்தையால் ஆளுகை செய்யப்படும். மனச்சாட்சி தேவனுடைய வார்த்தையால் வழிநடத்தப்படும்போது மட்டுமே அது ஒரு பாதுகாப்பான வழிகாட்டியாக இருக்க முடியும். வேறுவிதமாகச் சொன்னால், ஒருவர் தேவனுடைய சித்தத்தை அறிந்து அதை விசுவாசிக்கும் போது தான், அவர் தேவனுடைய போதனைக்கு விரோதமாகச் செல்லும்போது அல்லது தேவனுடைய எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறு வாழாதபோது ஒருவருடைய மனச்சாட்சி குத்தும். அப்போது தான் அவருடைய மனச்சாட்சி உயிருள்ளதாகவும், சிறந்ததாகவும் இருக்க முடியும்.

உங்களுக்கு நல்மனச்சாட்சி இருக்கிறதா? உங்களுக்கு தேவனுடைய சித்தம் என்னவென்று தெரியுமா? அவருடைய சித்தத்திற்கு நீங்கள் கீழ்ப்படிந்து விட்டீர்களா? இல்லையானால் உங்கள் மனச்சாட்சி உங்களைக் குத்த வேண்டும்; நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படியும் வரை அது தொடர்ந்து உங்களைக் குத்த வேண்டும். நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்து, உங்கள் பாவங் களிலிருந்து மனந் திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, உங்கள் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும்போது, கர்த்தர் உங்களை இரட்சித்து, தம்முடைய பிள்ளையாக்கி, அவருடைய குடும்பமாகிய சபையில் அங்கத்தினராக்குவார் (மாற்கு 16:16; அப். 2:38; கலா. 3:26, 27; அப். 2:47). இதை நீங்கள் செய்தால் உங்களால் நல்மனச்சாட்சியைப் பெற்றுக்கொள்ளமுடியும். அப்படிப் பெற்றுக்கொள்ளும் போது உங்களுக்காக கர்த்தருடைய சித்தம் இது தான் என்றும், நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து விட்டீர்கள் என்றும், அவர் உங்களை இரட்சித்திருக்கிறார் என்றும் நீங்கள் அறிந்து கொள்ள முடியும்.

பெண்கள் பகுதி

# நம்முடைய மிகச் சிறந்த நண்பர்

**ரேச்சல் இராஜநாயகம்**

**கி**றிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளுக்கு ஸ்தோத்திரம் கூறி எழுதுவது. ஒருவேளை இன்று இரவு இயேசு கிறிஸ்து நம் வீட்டிற்கு வந்து, நம்முடைய குடும்பத்தாருடன் உட்கார்ந்து உரையாடி, இரவு உணவை நம் மேசையில் நம்முடன் சேர்ந்து சாப்பிட்டால் நம் உள்ளமும், உணர்வுகளும் எப்படியிருக்கும்? இதை விட உயரிய சிலாக்கியம் வேறு எதுவாக இருக்கும்?.

மார்த்தாள், மரியாள் ஆகிய இருவரும் இந்த மகிமையான தருணத்தை தங்கள் வாழ்நாள் காலத்தில் பெற்றிருந்தார்கள். இயேசு கிறிஸ்துவுக்கென்று பூமிக்குரிய வீடு இல்லை. **மனுஷக்குமாரனுக்கே தலை சாய்க்க இடமில்லை** என்று தான் சொல்கிறார் (மத். 8:20). அவர் ஊழியம் செய்த நாட்களில் மக்களின் பிரச்சனைகளால் தன் இருதயம் மாறு பட்டபோதும், புழுதி நிறைந்த சாலை களாலும், ஜனக்கூட்டத்தினாலும் தன் சரீரம் களைப்படைந்து சோர்ந்து போன போதும் அவருக்கு புகலிடமாய் விளங்கி யது மார்த்தாள், மரியாள், லாசரு இவர் களின் வீடு மட்டுமே. அங்கே அன்பான வரவேற்பு, புரிந்து கொள்ளக்கூடிய இருதயம், களைப்படைந்த தன் சரீரத்துக்கு புத்துணர்வு கொடுக்கத்தக்க தான சரீரப்பிரகாரமான ஆதாரங்கள் போன்றவை இருந்தன. இவர்கள் பெத்தானியா என்ற சிறிய கிராமத்தில் வசித்து வந்தனர். இக்கிராமம் ஒலிவ மலையின் கிழக்குப் பகுதியில் எருசலே முக்கு அருகில் இருந்தது. இயேசு கிறிஸ்து மிகவும் அதிகமாக அன்பு செலுத்துமளவுக்கு அவர்கள் அவ்வளவு நல்லவர்களாக இருந்தனர் (யோவான் 11:5,36). மார்த்தாள், மரியாள் என்று சொல்லும் பொழுது அவர்களுடைய பெயர்களே மிகவும் அழகானதாகவும், மாசற்றதாக வும், ஏதோ ஒரு பலம் அதனுள்ள இருப்பதாகவுமே உணர முடிகிறது. எல்லா காலத்திற்கும், பிரபல மான பேசப்படுகிற, சம்பவத்துக்குச் சொந்தக்காரர்கள். இயேசு கிறிஸ்து அடிக்கடி அவர்கள் வீட்டிற்குச் சென்ற தை சாதாரண நிகழ்ச்சியாக நாம் எடுத்துக்கொள்ள முடியாது. வேதகமத் தில் பதிவு செய்யப்பட்ட சம்பவங்கள் எல்லாவற்றிலுமே இயேசு கிறிஸ்து அவர்கள் உள்ளத்தில் மிகவும் மரியா தையான உன்னதமான இடத்தைப் பெற்றிருந்தார் என்பது மிகவும் உண்மையானது.

நம் வீட்டிற்கு இயேசு வந்திருப் பாரானால் நாம் எவ்வளவு பூரித்துப் போயிருப்போம். இது இப்படித்தான் நம்மை நினைக்க வைக்கிறது. ஆனால் உண்மையாலுமே அது நடக்கக் கூடிய செயலா?. சரீரப்பிரகாரமாக அவரை நம் வீட்டிற்கு வரவைக்க முடியாததைக் காரணமாக காட்டி **சில நேரங்களில்** நம் உள்ளத்திலும், இல்லத்திலும் அவர் வாழ முடியும் என்பதை மறந்து விடுகிறோம். சில நேரங்களில் அவர் வராதபடி நாம் கதவை அடைத்து விடுகிறோம்.

அவர் தான் நம் மிகச் சிறந்த நண்பர். நமக்காக தம் உயிரை கொடுக்கக்கூடிய அளவுக்கு நம்மில் அன்பு வைத்திருந்தார். நம்மோடு நெருங்கிப் பழகக் கூடிய நண்பராகத் தான் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். இதோ வாசற்படியிலே

நின்று கதவைத் தட்டுகிறேன். ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான் (வெளி. 3:20) என்று சொல்வதிலிருந்து இதை நாம் நன்கு புரிந்து கொள்ளமுடியும்.

பிரியமானவர்களே! கேள்வி என்னவென்றால், நாம் அவருடைய நண்பர்களாக இருக்கிறோமா? உண்மையான தோழமை என்பது கொடுத்து வாங்குவது. ஒரு சகோதரனை விட நம்மேல் நெருக்கமாக ஒட்டிக் கொண்டே இருக்க முடியும் என்ற ஒருவருக்கு நம்முடைய தோழமையை திரும்பக் காட்டுகிறோமா?

*ஒருவன் என் சத்தத்திற்கு செவி கொடுத்தால்* என்று சொல்கிறார் இயேசு. எப்படி செவி கொடுக்க முடியும்? வேதத்தை வாசிப்பதன் மூலம்? ஆம் இதுதான் ஆரம்பம். நமக்கு அவருடைய வார்த்தை இருக்கிறது. இது நம்மை அவர் பாதத்தில் அமரச் செய்து அவரை பார்க்கச் செய்கிறது. ஆனால், வாசிப்பது மட்டும் போதாது. நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள் (யோவான் 15:4). இதில் தவறு செய்வது, அவருக்கு கீழ்ப்படிய மறுத்தோமானால் பிறகு தோழமைக்கு இடையூறு செய்து அவரை வர வேண்டாம் என்று சொல்லுகிறவர்களாக இருப்போம்.

இயேசு கிறிஸ்துவை நாம் நம்மால் ஏற்றுக்கொண்டு, நண்பர்களாக இருப்பதற்கு மற்றுமொரு வாய்ப்பு அவருடைய சீஷர்களுடைய வியாதி, பசி, நிர்வாணம், அந்நியர்களாக இருக்கும் போது, காவல்களில் இருக்கும் போது உதவுவது. அதற்கு ராஜா பிரதியுத்திரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார் (மத். 25:40).

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! நமக்காக நம் நிலைமையறிந்து செயல்படும் நல்ல நண்பர் ஒருவருமில்லையே என்று பல சமயங்களில் எதிர்பார்க்கிறோம். தவிக்கிறோம். வாழ்க்கையின் சந்தோஷம், கவலை, பிரச்சனைகள், முடிவெடுக்கும் தருணங்கள் போன்றவைகளில் நமக்கு சரியான திசையை காட்டவும், நம்மை புரிந்து கொண்டு உற்சாகப்படுத்தவும் ஒருவர் தேவை என்று விரும்புகிறோம். சகல வல்லமையும், சகல ஞானமும் நிறைந்த இயேசு ஒரு சகோதரனைக் காட்டிலும் நம்மீது உறவாடும் இயேசு நமக்கு இருக்கிறார் என்பது எவ்வளவு பெரிய சிலாக்கியம் அவர் நம்மை அறிந்திருக்கிறார். நம் தேவைகளை அறிந்திருக்கிறார். தேவையான திசைகளை காட்டுவதோடல்லாமல், நம்மை வழியில் நடத்தியும் செல்கிறார். இது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம்.

தன் உயிரைக் கொடுத்து, தன் சொந்த இரத்தத்தால் சம்பாதித்த கிறிஸ்துவின் சபை நமக்குக் கிடைத்த மகா பெரிய சிலாக்கியம், சொத்து. இதில் நாம் அங்கமாக இருக்கும் போது இயேசுவின் சரீரத்தோடு ஐக்கியமாகிறோம், நண்பர்களாகிறோம். கிறிஸ்துவின் சபையில் அங்கமாக வேண்டுமானால் அவர் பேசிய வசனங்களைக் கேட்க வேண்டும். கேட்டு அதை விசுவாசிக்க வேண்டும். பழைய வாழ்க்கையிலிருந்து மனம் திரும்ப வேண்டும். இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட வேண்டும். பின்பு பாவமன்னிப்பு பெற தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற வேண்டும். அப்போது நாமும், இயேசுவும் எப்போதும் நண்பர்களாக இருப்போம். மிகச் சிறந்த நண்பர் இயேசு மட்டுமே. ஆமென்

# வாலிபனே உனக்காக

வாலிபர் பகுதி

## பென்னி மார்ட்டின்

எனக்குப் பிரியமான வாலிபர்களே! உங்களை இந்தக் கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். தேவன் நமக்காக அருமையான காரியங்களை வைத்திருந்தாலும், பெரும்பாலான வாலிபர்கள், பிசாசு இந்த உலகத்தில் வைத்திருக்கும் பாவ காரியங்களை நாடிச் செல்கிறார்கள். நாம் பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கும்போது உலக முழுவதும் பொல்லாங் கனுக்குள் கிடக்கிறதென்று பார்க்கிறோம். பிசாசானவன் வாலிபர்களைப் பணம், புகழ், கவர்ச்சி போன்ற வலைகளில் பிடித்துக் கொள்கிறான். சுவிசேஷம் என்னும் வலையை விரித்து, தேவனுக்காக பலரைப் பிடிக்க வேண்டிய வாலிபர்கள் தாங்களே சாத்தானின் வலையில் விழுந்து விடுகிறார்கள். இது மிகவும் வேதனையான விஷயமாகும். பெரும்பாலான வாலிபர்கள் தங்களுடைய அதிகமான நேரத்தை உலகப்பிரகாரமான காரியங்களில் செலவிடுகிறார்கள். நாம் எபேசியர் 5:15,16 வசனங்களில் வாசிக்கும்போது, "*ஆனபடியினாலே நீங்கள் ஞானமற்றவர்களைப் போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போல் கவனமாய் நடந்து கொள்ளப் பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப் படுத்திக்கொள்ளுங்கள்*" *என்று வாசிக்கிறோம்.* இந்த உலகத்திலேயே மிகவும் விலை உயர்ந்தது நேரமாகத்தான் இருக்க முடியும். கிரேக்கத் தத்துவ ஞானியாகிய சாக்ரடீஸ் சொல்லும் போது, " ஒருவனிடம் இருக்கும் சொத்து அல்லது உடைமைகளில் சிறந்தது நேரம் தான் " என்று சொன்னார்.

நாம் நம்முடைய பரிசுத்த வேதாகமத்தில் பல தேவதாசர்கள் நேரம் அல்லது காலத்தின் தன்மையைப் பற்றிச் சொல்லியிருப்பதைப் பார்க்க முடியும். பக்தனாகிய யோபு சொல்லும் போது "என் நாட்கள் நெய்கிறவன் எறிகிற நாடாவிலும் தீவிரமாய் ஓடுகிறது " (யோபு 7:6) என்று சொல்கிறார். இந்த வசனத்தில் யோபு தன்னுடைய வாழும் நாட்களின் தன்மையைப் பற்றி விளக்குகிறார். யோபு சொல்வது முற்றிலும் சரியானதே. இந்த நாட்களில் நேரமானது ஒளி மற்றும் ஒலியை விட வேகமாகச் செல்கிறது. அந்த வேகத்தோடு ஈடுகட்ட முடியாவிட்டால் நாம் மிகுந்த சிரமத்திற்குள்ளாவோம். இந்த சந்தர்ப்பத்தைச் சாத்தான் நன்றாக பயன்படுத்திக் கொண்டு, வாலிபர்களின் நேரத்தை, அவர்களுடைய கவனத்தை வேறு திசையில் திருப்பி விட்டு வீணடித்து விடுகிறான். ஆனால், நாம் பிசாசுக்கு இடங்கொடுக்காமல் அவனுக்கு எதிர்த்து நின்றால் அவன் நம்மை விட்டு ஓடி விடுவான் என்று வேத வசனம் நமக்கு அறிவுரை கூறுகிறது (யாக்கோபு 4:7).

பிரியமான வாலிபர்களே, மத்தேயு நான்காம் அதிகாரத்தில் சாத்தான் நம்முடைய அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை தன்னுடைய வலையில் சிக்க வைக்கப் பார்த்தான், ஆனால், அவனால் வெற்றிப் பெற முடியவில்லை. சாத்தான், நம் தேவனைப் போல் சர்வஞானியல்ல, அவனுக்கு எல்லாம் தெரியாது. ஆனால், அவன் நம் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிப்பதால் நம்முடைய பெலவீனங்களைத் தெரிந்து கொள்கிறான் (யாக். 1:14)ல் நாம் வாசிக்கும்போது

“அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு சிக்குண்டு சோதிக்கப் படுகிறான் ” என்று பார்க்கிறோம். சாத்தான் நம்மைக் கூர்ந்து கவனித்து நாம் எதில் பெலவீனமாயிருக்கிறோம் என்பதை அறிந்து கொண்டு நம்மைத் தன்னுடைய வலையில் சிக்க வைக்கப் பார்க்கிறான். நம் இருதயத்தின் நினைவுகள் சாத்தானுக்குத் தெரியாது. நம் மனதுக்குள்ளேயே அவன் கிரியை செய்கிறான் என்ற கருத்துத் தவறானது. சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு மாத்திரமே நம்முடைய இருதயத்தின் நினைவுகள் தெரியும். ஆனால், அதே நேரத்தில் சாத்தானுடைய வல்லமையை நாம் குறைவாக மதிப்பிட்டு விடக்கூடாது. பேதுரு சொல்லும் போது, “ *உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான்*” என்கிறார் (1 பேதுரு 5:8). ஆனால், 1 யோவான் 4:4ல் நாம் வாசிக்கும் போது “உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்” என்று பார்க்கிறோம். எனவே, நம்மிலிருக்கிற தேவன் பிசாசை விடப் பெரியவராக இருப்பதால் பிசாசுக்கு நாம் எதிர்த்து நின்றால், அவன் நம்மை விட்டு ஓடிப்போவான். சரி, இப்போது தேவன் நமக்காக வைத்திருக்கும் அருமையான காரியங்களைக் கவனிப்போம்.

## I அருமையான சிலாக்கியம் வசனத்தைக் கேட்கும்படி

பிரியமானவர்களே, பலர் இந்த உலகத்தில் இன்றளவும் ஒரே ஒரு சுவிசேஷப் பிரசங்கத்தைக் கூட கேட்டதில்லை. இந்த உலகத்தில் பல பணக்காரர்கள் அநேகக் காரியங்களைக் கேட்டிருக்கலாம், பார்த்திருக்கலாம். ஆனால், அவைகள் ஒன்றுமே சுவிசேஷப் பிரசங்கத்திற்கு ஈடாகாது. சுவிசேஷமாகிய தேவனுடைய வார்த்தையில் வல்லமையிருக்கிறது, ஜீவன் இருக்கிறது. எனவே தான், அது ஆத்துமாவை இரட்சிக்கிறது. இப்படிப்பட்ட தேவனுடைய வார்த்தைகளால் நம்மை நாம் நிரப்பிக் கொள்ள வேண்டும், அதற்கு நாம் தேவனுடைய வார்த்தைகளை அதிக நேரம் எடுத்து தியானிக்க வேண்டும். சங்கீதக்காரன் சொல்லும்போது உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது என்றார் (சங். 119:105) இது மெய்தான். ஏனென்றால், இருள் சூழ்ந்த நம்முடைய வாழ்க்கைக்கு நல்ல பாதையைக் காட்டக்கூடிய வெளிச்சமாக தேவனுடைய வார்த்தை இருக்கிறது. வாலிபராகிய நாம் நம்முடைய வழியை எதினால் சுத்தம் பண்ண முடியும்? வேத வசனத்தின்படி நம்மைக் காத்துக் கொள்ளுகிறதினால் தானே! ஆனால் நாம் தேவனுடைய வார்த்தையை தியானித்தால் மாத்திரம் போதாது மாறாக, அதை நாம் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த வேண்டும். அப்போதுதான் தேவனிடத்திலிருந்து முழுமையான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். இதைப் பற்றி யாக்கோபு ஆசிரியர் சொல்லும் போது, “ அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களுமாயிருங்கள் ” என்று கூறுகிறார் (யாக்கோபு 1:22).

## II அருமையான வார்த்தைகள் விசுவாசிக்கும்படி

பலவிதமான நெருக்கடிகளிலிருந்து தேவன் நம்மை விடுவித்த விதத்தை நினைத்துப் பாருங்கள். அதற்குக் கைம்மாறாக, தேவன் நம்மிடமிருந்து

எதிர்பார்ப்பது அவரை நாம் விசுவாசிக்க வேண்டுமென்பதுதான், விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம் என்று (எபி. 11:6)ல் நாம் வாசிக்கிறோம். விசுவாசமில்லாமல் சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக. இந்த உலகத்தில் பலர் மகான்கள் அப்படிச் செய்தார்கள், இப்படிச் செய்தார்கள் என்று அவர்களை நேரில் கண்டிராமல் வரலாற்றைப் படிப்பதன் மூலமாகவோ அல்லது மற்றவர்கள் சொல்லக்கேட்டோ நம்புவார்கள். ஆனால், தேவன் நம்முடைய பாவங்களுக்காக தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்பினார். இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்கிற உண்மையை விசுவாசிக்க மறுப்பார்கள். பிரியமானவர்களே! நம்முடைய விசுவாசத்தின் அளவிற்கேற்ப தான் நம்முடைய ஆசீர்வாதத்தின் அளவு இருக்கும். எனவே, நாம் தேவனிடத்தில் எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ண வேண்டும் என்று கேட்க வேண்டும்.

### III அருமையான தேவன் நாம் ஆராதிக்கும்படி

நாம் ஆராதிக்கும் ஜீவனுள்ள தேவன் எவ்வளவு அருமையானவர் என்பதை அநேக வேளைகளில் மறந்து போகிறோம். தேவன் நம்முடைய வாழ்க்கையில் செய்த எல்லா நன்மைகளையும் எண்ணிப்பார்த்தால் நாம் அவரை எப்போதுமே துதிக்கத் தூண்டும். ஆனால், நாம் அவைகளை எண்ணிப் பார்ப்பதில்லை. தேவன் ஒரு நன்மையைச் செய்யும்போது, அந்த நேரத்தில் மட்டும் அதற்காகத் தேவனுக்கு ஒப்புக்கு ஒரு நன்றி சொல்கிறோம், பின்பு மறந்து விடுகிறோம். தேவனுடைய அன்பின் ஆழம், உயரம், நீளம், அகலம் போன்றவைகள் அவர் நமக்காக தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்பினதால் விளங்குகிறது. இதில் தேவனுடைய அன்பு விளங்குகிறது (யோவான் 3:16) அவருடைய இரக்கம் விளங்குகிறது (எபே. 2:4). அவருடைய கிருபை விளங்குகிறது (எபே. 2:8). இப்படிப்பட்ட அருமையான தேவனை நாம் கொண்டிருப்பது மாபெரும் பாக்கியமாகும்.

## ஏன் முயற்சிக்கக் கூடாது?

1. உண்மையான சத்தியத்தைக் கண்டுபிடிக்க (யோவான் 17:17)
2. உண்மையான அன்பை அடையாளம் காண (அப். 2:28)
3. உண்மையான ஆராதனையை ஏறெடுக்க (யோவான் 4:24)
4. உண்மையான இரட்சிப்பின் திட்டத்திற்கு ஒப்புக்கொடுக்க (மத். 28:18,20)
5. உண்மையான சபையை அடையாளம் கண்டு கொள்ள (ரோமர் 16:16)




# கனம் பண்ணு

ABEL R. NAYAGAM



ஹாய்! என்ன குழந்தைகளே அனைவரும் சுகமாக இருக்கிறீர்களா? சுகமாகவே இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். உங்கள் கல்விக் காரியங்கள் அனைத்தும் தேவனுடைய கிருபையால் நன்றாக இருக்கிறது என்று நம்புகிறேன். அதோடு கூட வேத அறிவும் நமக்கு அவசியமானதாகும். அதினாலே தான் மாதந்தோறும் உங்களுக்கு வேத அறிவுரைகளை நாங்கள் வழங்குகிறோம். இந்த மாதத்திற்கான பாடம் என்ன என்று பார்க்கலாமா?...ம் தொடர்ந்து வாசியுங்கள்.

நாம் செய்யும் ஒவ்வொரு காரியங்களும் நம்முடைய பெற்றோர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. நல்ல காரியங்களைச் செய்யும் போது சந்தோஷப்படுவார்கள். அதே வேளையில் நாம் தவறு செய்யும் போது நம்மைக் கடிந்து கொண்டு அவர்கள் கவலைப்படுவார்கள். குழந்தைகளாகிய நாம் சில சமயம் அதை உணருவதில்லை. நம் செயல்களினிமித்தம் நம் நம்பிக்கையின் நிமித்தம் எப்படி நம் பெற்றோர்களை மகிழ்விக்க முடியும் என்பதை இம்மாதம் கற்றுக் கொள்வோம்.

நீதி. 28:7ல் வேத பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறவன் விவேகமுள்ள புத்திரன் என்று வசனம் சொல்லுகிறது (நீதி. 23:24) ஞானமுள்ள பிள்ளையைப் பெற்றவன் அவனால் மகிழுவான் என்றும் கூறுகிறது. அப்படியென்றால் நாம் விவேகமாகவும், ஞானமாகவும் இருக்க வேத பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட நடக்கைதான் நம் பெற்றோருக்கு மனமகிழ்ச்சியைத் தரும்.

வேத பிரமாணம் சிறுவர்களுடைய நல்நடத்தைக்குக் கொடுக்கும் சில அறிவுரைகளை இங்கு கற்றுக் கொள்வோம்.

புதிய ஏற்பாட்டில் எபே. 6:1,2 லும், பழைய ஏற்பாட்டில் யாத். 20:12ல் இருக்கும் இந்த இரண்டு வசனங்களும் பெற்றோரைக் கனம் பண்ண வேண்டும் என்று கூறுகிறது. கனம் பண்ணுதல் என்றால் அவர் களை மதிக்க வேண்டும், மரியாதை செலுத்த வேண்டும், மிக முக்கியமாகக் கீழ்ப்படிய வேண்டும்.

**கனம் பண்ணுதல் என்றால் அவர்களை மதிக்க வேண்டும், மரியாதை செலுத்த வேண்டும், மிக முக்கியமாகக் கீழ்ப்படிய வேண்டும்.**

கீழ்ப்படியாத பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு கவலையையும், அவமானத்தையுமே கொண்டு வருகிறார்கள். குழந்தைகளாகிய நாம் கீழ்ப்படிந்து நம் பெற்றோரை கனம்

செய்வது, நம் பெற்றோரை மட்டுமல்ல தேவனையும் கனம் பண்ணுகிற ஒரு செயல். தேவன் அதிலே நிச்சயம் பிரியப் படுவார். (நீதி. 1:8) *உன் தகப்பன் புத்தியைக் கேள். உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே* என்று கூறுகிறது.

இதற்குச் சிறந்த உதாரணம் நம் எல்லாரையும் நேசித்த இயேசு கிறிஸ்து தான். அவர் உலகத்திலே வாழ்ந்த போது தன் தகப்பனுக்கும், தாய்க்கும் உகந்த பிள்ளையாகவே மிகுந்த கீழ்ப்படிதலோடு வளர்ந்தார். அதுமட்டுமல்ல தன்னை அனுப்பின தன் பரம பிதாவின் சித்தத்திற்கு மரணபரியந்தம் கீழ்ப்படிந்தார். அப்படிச் செய்ததின் மூலம் அவர் தன் பிதாவிற்கு கனத்தையும், மகிமையையும் ஏற்படுத்தினார் என்று தான் வேதம் கூறுகிறது.

எனவே, நம் நிமித்தம் நம் பெற்றோர்கள் மகிழ்ச்சியாகவும், சந்தோஷமாகவும் இருப்பதற்கும், அதைவிட முக்கியமாக தேவனுக்குப் பிரியமாக அவருடைய நாமம் நம் நிமித்தம் கனமடையவும், நாம் செய்ய வேண்டிய ஒரு காரியம் நம் பெற்றோரை நாம் கனம் பண்ணவும் வேண்டும்.

இந்த அறிவுரையை நீங்கள் ஒவ்வொருவரும் ஏற்றுக்கொண்டு, அதினாலே வரும் நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்ளுங்கள். சரியா?

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

## இருதயங்களின் வகை

1. நொறுங்குண்ட இருதயம் (சங். 34:18)
2. பெருமையுள்ள இருதயம் (நீதி. 16:5)
3. மகிழ்ச்சியான இருதயம் (நீதி. 17:22)
4. இளைத்துப்போன இருதயம் (நீதி. 13:12)
5. சுத்த இருதயம் (சங். 51:10)
6. ஞானமுள்ள இருதயம் (நீதி. 16:21)
7. மூட இருதயம் (நீதி. 15:7)

# நிழலும், நிஜமும்

*(The Shadow and the Reality)*

## Bro. ஜே.ஆ. ஜேம்ஸ் ராஜ்குமார்

அன்பானவர்களே!

சென்ற மாதத்தில் மத். 22:35-40 வசனங்களில் சொல்லப்பட்ட பழைய ஏற்பாட்டு ஆராதனை முறைமையையும் அதற்குப் பதிலாக இயேசு கிறிஸ்து வானவர் கொடுத்த புதிய ஏற்பாட்டுத் தொழுகையையும், அதே போல அன்பையும் குறித்துப் பார்த்தோம். இந்த மாதத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவானவர், தான் இந்த பூமியில் வாழ்ந்த காலத்தில் உபதேசித்த மலைப் பிரசங்கத்தில் போதித்த பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு சத்தியங்களைக் கவனிப்போமாக ! இயேசுவானவர் புதிய ஏற்பாட்டு சத்தியத்தை போதித்திருந்தாலும் அது பொதுவான மக்களுக்கு அப்பொழுது நடைமுறைக்கு வரவில்லை. ஏனென்றால், இயேசு கிறிஸ்துவானவர் வாழ்ந்தது முழுவதும் பழைய ஏற்பாட்டின் காலம் என்பதை நாம் ஏற்கனவே விவாதித்து தெளிவு பெற்றோம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மத். 5 ஆம் அதிகாரத்தில் ஒரு தேவனுடைய பிள்ளை எப்படியிருக்க வேண்டும் என்பதை 3-16 வசனங்களில் சுட்டிக் காட்டுகிறார். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த மக்களும் இப்படியே இருந்திருக்க வேண்டும். ஆனால், அவர்களில் ஏராளமானோர் இந்த குணாதிசயங் களுக்கு எதிராக இருந்தார்கள். ஆனால், புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கிறிஸ்தவர்கள் இந்த குணங்களை, சிந்தையை உடையவர்களாயிருக்க கிறிஸ்துவானவர் 3-16 வசனங்களில் சொல்லித்தந்தார். இந்த வசனங்களை ஒவ்வொன்றாக விவரிப்ப தற்கு இப்பொழுது சமயம் போதாது. மேலும், 17, 18 வசனங்களில் தீர்க்க தரிசனங்களையும் நியாயப்பிரமாணத்தையும் நிறைவேற்றி முடிக்க வந்தேன் என்று சொன்னவர். 19 ஆம் வசனத்தில் முதலாவது போதிக்கிறவன் இவைகளைக் கைகொண்டு போதிக்க வேண்டும். அப்பொழுது தான் அவன் பரலோக இராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான். மேலும், பிதாவை மகிமைப்படுத்துவான் (16ம் வசனம்) என்றார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவானவர் இப்படித்தான் நியாயப்பிராமணத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்று தான் நடந்து போதித்ததால் அவர் பழைய ஏற்பாட்டு காலத்திலே வாழ்ந்த எல்லாரிலும் பெரியவரா யிருக்கிறார். மேலும், புதிய ஏற்பாட்டு சத்தியத்தைப் போதித்து அதன்படி அவர் நடந்ததினாலே புதிய ஏற்பாட்டு காலத்து மக்கள் எல்லாரையும் விட அவர் பெரியவராயிருக்கிறார். இப்படி அவர் சிருஷ்டிகள், ஆண்டவர் என்பதற்காக மட்டுமல்ல, சட்டங்கள் அவர் மூலமாக உண்டாக்கப்பட்டிருந்தும் நீதியாக அந்த சட்டங்களின்படி நடந்து அதை போதித்ததினால் அவர் இரண்டு ஏற்பாட்டின் காலத்திலும் எல்லா மனிதர்களை விட, தீர்க்கதரிசிகளை விடப் பெரியவராயிருக் கிறார்.

அடுத்தது 20-ம் வசனத்திற்கு வருவோம். அநேக பிரசங்கியர்கள் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்கள் எந்த அளவு கர்த்தருக்கு கொடுக்க வேண்டும் என்று

என்று காணிக்கை கொடுப்பது பற்றி பிரசங்கம் செய்கிறார்கள். இந்த வசனம் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்கள் எவ்வளவு காணிக்கை கொடுக்க வேண்டும் என்பதைத் திட்டமிடுகிறது. இந்த வசனத்தை ஆண்டவராகிய இயேசுவானவர் போதித்து நம்மிடத்தில் எதிர்பார்ப்பது என்னவென்றால், வேதபாரகர், பரிசேயர் என்பவர் களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். நீதி என்றால் என்ன என்பதை நாம் முன்னமே பார்த்தோம். அது விசுவாசத்தோடு தேவனு டைய சட்டங்களுக்கு (இன்றைய காலத்தில் நமக்கு கொடுக்கப்பட்ட சட்டங்களுக்கு) கீழ்ப்படிந்து நடப்பது ஆகும். அந்தப்படி பார்த்தால் வேதபாரகர் பரிசேயர். அதாவது பழைய ஏற்பாட்டு காலத்து மக்களுடைய நீதியிலும் நம்முடைய நீதி அதிகமாயிருக்க வேண்டும். அவர்களுடைய நீதி நியாயப் பிரமாண சட்டத்தின்படி 10 சதவீதம் தசம பாகம். கர்த்தருக்கு காணிக்கையாக கொடுக்க வேண்டும். ஆனால், பழைய ஏற்பாடு கிறிஸ்துவானவரால் ஒழிந்து போயிற்று. ஆகவே நாம் இன்றைக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும். 10 சதவீதம் விட அதிகம் கொடுக்க வேண்டும். அதாவது, தசம பாகத்தை விட அதிகம் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் நாம் கிறிஸ்தவர்களாயிருக்க முடியாது. பரலோக இராஜ்யத்தில் பிரவேசித்திருக்க முடியாது.

| இது நிழல் | இது நிஜம் |
|---|---|
| தசமபாகம் : பழைய ஏற்பாட்டு காலத்து மக்கள் தங்களின் அனைத்து வருமானத்தில் 10 ல் ஒரு பங்கு கர்த்தருக்கு கொடுக்க வேண்டும். | தசம பாகத்தை விட அதிகம் : அவர்கள் நீதியை விட நம் நீதி அதிகம் இருக்க, அவர்கள் கொடுத்த தசம பாகத்தை விட நாம் அதிகம் கொடுக்க வேண்டும். |

உதாரணமாக, இதன்படி ஒருவருக்கு ரூ. 10,000/- (பத்தாயிரம்) மாத சம்பளம் என்று வைத்துக் கொள்வோம். அவர் பழைய ஏற்பாட்டு காலத்தில் இஸ்ரவேலனாக வாழ்ந்திருந்தால் அவர் ரூ.1,000/- (ஆயிரம்) அந்த மாதத்தில் கர்த்தருக்கு காணிக்கையாகக் கொடுத்திருப்பார். இப்பொழுது புதிய ஏற்பாட்டின் காலத்தில் அந்த நபர் குறைந்தது ரூ. 1001/- (ஆயிரத்து ஒன்று) ஆவது கண்டிப்பாக கொடுக்க வேண்டும். அந்த மாதத்தில் நான்கு ஞாயிற்றுக்கிழமைகள் வந்தால் மூன்று வாரங்களில் 3x250 ம் ஒரு வாரத்தில் ரூ. 251 மாவது அவர் காணிக்கை செலுத்தியிருக்க வேண்டும். அப்படி கொடுக்கவில்லை என்றால் அவர் பரலோக ராஜ்யத்தில் சேர்த்து கொள்ளப்படவில்லை என்பதை இந்த 20 ம் வசனத்தில் ஆண்டவர் கூறுகிறார்.

இப்படித்தான் புதிய ஏற்பாட்டு காலத்து மக்கள் ஆரம்ப நாட்களில் கொடுத்தார்கள். 2 கொரி 8:1-3 ம் வசனங்களில் பவுல் அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களா யிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய் கொடுத்தார்கள். மேலும், அவர்கள் தங்கள் திராணிக்குத்தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்கத் தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்கள்

என்பதற்கு நான் (பவுலாகிய அப்போஸ்தலரே) சாட்சியாயிருக்கிறேன் என்கிறார். மக்கெதோனிய நாட்டு சபையார் 10:1 அல்லது 11 சதவீதம் அல்ல அதைவிட அதிகம் கொடுத்திருக்க வேண்டும் என்பது நமக்கு விளங்குகிறது. அவர்கள் தேவனுடைய இராஜ்தயதில் இருந்தார்கள் என்பதற்கு பரிசுத்த ஆவியானவரே பவுல் மூலமாக சாட்சி கூறுகிறார். இன்றைக்கு கிறிஸ்தவர்கள் என்று சொல்லுகிற நாம் எத்தனை பேர் தேவனுடைய இராஜ்யத்தில் இருக்கிறோம் என்பதை நிதானித்துப் பார்க்க வேண்டும். தேவனுக்காக, தேவனுடைய ஊழியத்திற்காக முக்கியத்துவம் கொடுத்து அதற்காக அதிகம் செலவு செய்து தரித்திர நிலைமையில் இருக்கின்ற சகோதர சகோதரிகளை மற்றவர்கள் சேமிக்கத் தெரியாதவர்கள், திட்டமிடத் தெரியாதவர்கள் என்று அற்பமாக பேசுகிற உலகமாக இன்றைக்கு கிறிஸ்தவ உலகமே இருக்கிறது என்பது வருந்தத்தக்கது. அப்படி ஏளனமாகப் பேசுகிற வர்களுக்கு ஐயோ! என்று தான் சொல்ல வேண்டும். லூக். 21:1,4ல் தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததையெல்லாம் காணிக்கையாகப் போட்டுவிட்ட அந்த ஒரு ஏழை விதைவை திட்டமிடத் தெரியாதவளல்ல. அவள் பரலோகத்திலே தன் பொக்கிஷத்தைச் சேர்த்து வைக்க திட்டமிட்டார், மத். 6:19,21 வசனங்களின்படி அந்த ஏழை விதைவையின் இருதயத்தை (சிந்தையை) சாதாரணமாக நாம் எடை போட்டுவிட முடியாது. வசனம் 21ன் படி அவளுடைய இருதயத்தின் எண்ணம் பரலோகத்திலே இருந்திருக்க வேண்டும். ஆகையால் தான், அவள் தனக்கு உண்டானதையெல்லாம் விட அதாவது பூமிக்குரிய வாழ்க்கையை விட தேவனுக்காக வாழ்வது அல்லது தேவனோடு வாழ்வது சிறந்தது என்று முடிவு செய்தாள். பழைய ஏற்பாட்டு காலத்திலும் இப்படிப்பட்டவர்கள் வாழ்ந்தார்கள் என்பது ஆச்சரியமாயிருக்கிறது. இன்னும் ஏராளமான உதாரணங்களை நம்மால் வேதத்திலிருந்து நாம் சந்தித்த, பழகின சகோதர சகோதரிகளிடமிருந்து கொண்டு வர முடியும். சுட்டிக்காட்ட முடியும், அப்படிச் செய்தால் நம் பாடத்தில் நோக்கம் மாறிப் போகும் என்பதற்காக நாம் அடுத்த வசனப் பகுதிகளுக்கு கடந்து செல்வோம்.

மத். 5:21,26ல் பழைய ஏற்பாடாக இருந்த ஒரு சட்டத்திற்குபதில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து புதிய சட்டத்தை அல்லது புதிய இருதயத்தை சிந்தையை ஏற்படுத்துகிறார். கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலை செய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும், பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். இங்கே பூர்வத்தார் என்பது சீனாய் மலையண்டை மேசேயின் மூலமாக பழைய ஏற்பாட்டை பெற்றுக் கொண்ட மக்களைக் குறிக்கிறது (யாத். 20:1,17) உபா. 5:1,4, மேற்கண்ட மத். 5:21,26ல் பழைய, புதிய ஏற்பாட்டின் சட்டங்கள் என்ன என்பதை கவனிப்போம். மத். 5:21 பழைய ஏற்பாட்டில் தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு கொடுத்த சட்டம், யாத். 20:13. இந்த சட்டம் ஒரு மனிதனுடைய செயலை மாத்திரமே கட்டுப் படுத்தியது. எப்படியென்றால், ஒருவன் தன் கையினாலோ அல்லது ஒரு ஆயுதத் தைக் கொண்டோ அடுத்தவனை அவன் உயிர் உடலை விட்டு போகும் வரை தாக்குவது, இது கொலை அதைச் செய்யக் கூடாது என்று அவர்களுக்குச் சட்டமாக கொடுக்கப்பட்டது.

ஆனால், மத். 5:22ம் வசனத்தில் கிறிஸ்துவானவர் இன்றைக்கு நமக்குச் சொல்லுகிறார், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்து கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்;

இது புதிய சட்டம். இந்தச் சட்டம் ஒருவன் தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபிப்பதையும், வீணன், மூடன் என்று சொல்வதையும் தடை செய்கிறது. நாம் ஒரு சகோதரன் மேல் எப்பொழுது நியாயமில்லாமல் கோபிப்போம். வீணன், மூடன் என்று சொல்லுவோம். முதலாவது, அந்த சகோதரனை அற்பமாக நினைக்கும் போது தான் அதாவது, அந்த சகோதரன் பட்சத்தில் (பக்கத்தில்) நியாயம் இருக்கிறது நம் பக்கத்தில் நியாயம் இல்லை, இருந்தாலும் நியாயம் இல்லாத நம்மை நியாயப் படுத்திக் கொள்ளுவதற்காகவும், நியாயமாய் நடக்கிற சகோதரனை வீணன், மூடன் என்று சொல்லி அவனை குற்றாவாளியாக்கிவிட்டு, நாம் நியாயமில்லா தன்மையை நியாயப்படுத்தி அதிலிருந்து தப்பிக்கப் பார்க்கிறோம். இது ஒரு கொலை என்று ஆண்டவர் சொல்லுகிறார். இப்படிச் செய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கும், ஆலோசனை சங்கத்தீர்ப்புக்கும், எரி நரகத்திற்கும் ஏதுவானவன். இதிலிருந்து நாம் தப்பிக்கும்படி முதலாவது நம்மை விட மற்றவர்களை மேன்மையாக எண்ண வேண்டும் (பிலிப். 2:3,5). இப்படிச் செய்வதால் மட்டும் நம்மால் தேவனுக்கு முன்பாக கிறிஸ்தவர்களாயிருக்க முடியும். பழைய ஏற்பாடு செயலைக் கட்டுப் படுத்தியது. ஆனால், கிறிஸ்துவின் புதிய ஏற்பாடு நம் யோசனையை, சிந்தையை கட்டுப்படுத்துகிறது. ஆகையால், புதிய ஏற்பாடு ஆவிக்குரியதாயிருக்கிறது. இந்த யோசனையோடு கீழ்க்கண்ட வசனங்களை ஆராய்ந்து படியுங்கள். (யோவான் 6:63; ரோமர் 8:1,2,9; 2 கொரி. 3:6,8,17). கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு சத்தியம் ஆவிக்குரியதாகவும், புதிய ஏற்பாட்டு சத்தியத்தின்படி ஊழியம் செய்கிறவர்கள் கிறிஸ்துவின் ஆவிக்குரிய ஊழியக்காரர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு நியாயப்பிரமாணமாகிய பழைய ஏற்பாட்டைக் கொண்டு போதிக்கிற வர்கள், ஆராதிக்கிறவர்கள், புதிய ஏற்பாட்டு சத்தியத்தைக் கைகொண்டு போதித்து ஆராதிக்கிறவர்களை ஏளனம் செய்து துன்பப்படுத்துகிற நிகழ்ச்சி இன்றைக்கும் நடந்து வருகிறது. (கலா. 4:29)

| நிழல் | நிஜம் |
|---|---|
| கொலை செய்யக்கூடாது (மத். 5:21)<br><br>(பழைய ஏற்பாடு) | தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபிக்கக்கூடாது. வீணன், மூடன் என்று சொல்லக்கூடாது. அதாவது அற்பமாக எண்ணக்கூடாது.<br>(மத். 5:22) (புதிய ஏற்பாடு) |


உன் மனதளவில் உன் சகோதரனை நீ அற்பமாக எண்ணிப் பாவம் செய்திருந்தால் நீ நரகத்திற்கு போகிற அபாயத்தில் இருக்கிறாய். ஆகையால், நீ நரகத்திற்கு போகாதபடிக்கு உடனே போய் உன் சகோதரனோடு அல்லது சகோதரியோடு நல்மனம் பொருந்து, இதை நீ பலிபீடத்திற்கு சென்று காணிக்கை செலுத்துவதற்கு முன் செய். இல்லாவிட்டால் உன் காணிக்கையை தேவன் அங்கீகரிக்கமாட்டார். நாம் யோசித்துப் பார்க்க வேண்டும் மனதிலே மேட்டிமை யான எண்ணம் வைத்துக் கொண்டு மற்றவர்களை அற்பமாக எண்ணிக் கொண்டு நாம் சபை கூடுவது, ஆராதனை செய்வது போன்றவைகளைச் செய்தால் அதை தேவன் ஏற்றுக்கொள்வாரா என்பதை யோசித்தால் அப்படிப்பட்டவர்கள் ஆராதனைக்கு வருதையே தேவன் ஏற்றுக்கொள்ளமாட்டார் (மத். 5:8; மத். 5:1,12).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மலைப் பிரசங்கத்திலே போதித்த குணாதிசயங்களோடு சிந்தையோடு நாம் இன்றைக்கு தேவனை ஆராதிக்கிறோமா, ஆராதனையில் பங்கு பெறுகிறோமா என்று நம்மை நாமே நிதானித்துப் பார்க்க வேண்டும். அப்படியில்லாவிட்டால் நாம் பெயரளவிற்கு அல்லது மற்றவர்கள் பார்ப்பதற்கு கிறிஸ்தவர்களாயிருக்கிறோம். தேவனுக்கு முன்பாக அவரால் ஏற்றுக் கொள்ளப்படுகிற கிறிஸ்தவர்களாயிருக்கிறோமா என்பதை ஆலோசித்துப் பார்க்க வேண்டும். அநேக நேரங்களில் யூதர்களின் பலியை ஆராதனையை தேவன் ஏன் ஏற்றுக்கொள்ளவில்லையென்றால், அவர்கள் இருதயத்தில் பொறாமை, வஞ்சனை, கோபம், விபச்சாரம், வேசித்தனம், மற்றவர்களை அபற்மாக எண்ணுவது போன்ற தீய குணங்களை இருதயத்தில் வைத்துக்கொண்டு அதோடு அவர்கள் பலி செலுத்தி ஆராதித்ததினால் அந்த ஆராதனை யை தேவன் ஏற்றுக்கொள்ளவில்லை.ஆகையால், தேவன் ஏற்றுக் கொள்ளத் தக்கதாக அவரை ஆராதனை செய்யுங்கள் என்று ஆண்டவர் பழைய ஏற்பாட்டு மக்களையும் (அவருக்கு சமமான காலத்தில் வாழ்ந்தவர்களையும்) அவர் எச்சரிக்கிறார். (ஏசாயா 1:11,20; சங். 50:7,23) நாம் எப்படிப்பட்ட ஆராதனை செய்கிறோம் என்பதை நாமே அறிவோம். தேவன் அறிவார், நிறைவாக தேவன் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக அவரை ஆராதனை செய்வோம். சகோதர, சகோதரிகளை மதிப்போம், கிறிஸ்துவைப் போல.

தொடர்ந்து அடுத்த மாதத்தில் ஆராய்வோம். ⁂

(தொடரும்)

| பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாடு |
|---|---|
| மோசே மூலமாக பிரமாணம் கொடுக்கப்பட்டது (யோவான் 1:17). | கிருபையும் சத்தியமும் கிறிஸ்து மூலமாக கொடுக்கப்பட்டது (யோவான் 1:17) |
| மிருகங்களின் இரத்தத்தால் பிரதிஷ்டை பண்ணப்பட்டது (எபி. 9:18,22). | கிறிஸ்துவின் இரத்தத்தால் முத்திரையிடப்பட்டிருக்கிறது (எபி. 9:14,17) |
| வரவிருக்கின்ற கிறிஸ்துவின் பிரமாணத்திற்கு நிழலாயிருக்கிறது (எபி. 10:1) | தேவனுடைய பரலோகத் திட்டமாயிருக்கிறது (எபி. 8:4,5) |
| மிருக பலிகள் தொடர்ந்து செலுத்தப்பட்டன (எபி. 10:1,4). | கிறிஸ்துவின் இரத்தம் ஒரே தரம் பலியாகச் செலுத்தப்பட்டது (எபி. 9:24,28). |
| அக்கிரமங்கள் நிமித்தமாக அதுக் கூட்டப்பட்டது (கலா. 3:19). | ஆரம்பத்தலிருந்தே உண்மையுள்ளவர்களின் இரட்சிப்பிற்கு தேவனுடைய திட்டமாயிருக்கிறது (கலா. 3:16). |
| சிலுவையின் மேல் ஆணியடிக்கப்பட்டது (கொலோ. 2:14). | பழையதிற்கு பதிலாக கொடுக்கப்பட்ட புதிய உடன்படிக்கையாயிருக்கிறது (எபி. 8:13). |



# பாடம்-23. அந்திக் கிறிஸ்து

K. பாஸ்கர்

அன்பான திருமறை ஆசான் வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள் பல. தொடர்ந்து என் கட்டுரைகளைப் படித்து வருவது குறித்து மகிழ்ச்சி. இதன் மூலம் வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே எனது ஜெபமாகும்.

இந்த மாதத்தில் மிக முக்கியப் பாடமான அந்திக் கிறிஸ்து பற்றி அறிந்து கொள்வோம். இதன் மூலம் வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை அறிந்து கொண்டு அதற்கு நம்மை ஒப்புக் கொடுப்போம்.

அந்தக் கிறிஸ்து பற்றி கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ளுகிறவர்களிடையே நிறைய யூகங்களும், மனிதக் கற்பனைகளும், மனித உபதேசங்களும் நிறையவே இருக்கிறது. அவர்கள், அந்திக் கிறிஸ்து இன்னும் வரவில்லை என்றும், இயேசு கிறிஸ்து பூமியிலே ஆயிர வருட அரசாட்சி செய்யும் பொழுது அந்திக் கிறிஸ்து வருவான் என்றும் நம்புகின்றனர். ஆனால், வேத வசனம் என்ன கூறுகிறது என்று யாருமே நினைப்பதில்லை. ஆதலால், இப்படிப்பட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள்.

## I அந்திக் கிறிஸ்து என்றால் என்ன?

அந்திக் கிறிஸ்து என்றால் ஒரு மிருகம் என்றும், அந்த மிருகம் வித்தியாசமாக இருக்கும். அது மனுஷ முகமும், கரடி முகமும் கலந்து பயங்கர மான, ராட்ஷச பலங்கொண்டு எல்லா கிறிஸ்தவர்களையும் கொடுமைப்படுத்து கிறதாயுமிருக்கும் என்று அநேகர் கற்பனை பண்ணிக் கொண்டு இருக்கின்றனர். அந்திக் கிறிஸ்து என்றால் அவர்கள் நினைப்பது போல இல்லை! அந்த வார்த்தைக்கு கிரேக்க மொழியில் ஆன்டி கிறிஸ்ட்டோஸ் (Anti Christos) என்றுள்ளது. அதன் பொருள், கிறிஸ்துவின் உருவத்தைப் போர்த்துக் கொண்டு கிறிஸ்துவை எதிர்ப்பவன் என்று அர்த்தம். அதாவது, கிறிஸ்துவின் வேஷத்தைத் தரித்துக் கொண்டு கிறிஸ்துவுக்கு எதிராக செயல்படுபவன் என்று பொருள். அந்திக் கிறிஸ்து என்றால் ஒரு மிருகம் அல்ல! அது, கிறிஸ்துவின் வேஷத்தைத் தரித்துக்கொண்டு, கிறிஸ்தவன் என்று சொல்லிக்கொண்டு இருக்கும் மனிதர்களைக் குறிக்கிறது.

அந்திக் கிறிஸ்து என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் 1 யோவான் 2:18, 19,22, 4:3; 2 யோவான் வசனம் 7ல் மட்டும் வருகிறது. முதல் நூற்றாண்டில் அந்திக் கிறிஸ்து பற்றிய வதந்தி இந்த நாட்களில் காணப்படுவது போல அந்த நாட்களிலும் கிறிஸ்தவர்களிடையே இருந்தது. ஆகவே, யோவான் அப்போஸ்தலன் பிள்ளை களே, இது கடைசிக் காலமாயிருக்கிறது. அந்திக் கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக் கிறிஸ்துகள் இருக்கிறார்கள்

அதினாலே இது கடைசிக் காலமென்று அறிகிறோம் என்று எழுதுகிறார். (1யோவான் 2:18) இங்கே பரிசுத்த ஆவியானவர் அந்திக் கிறிஸ்து இனிமேல் வருவான் என்று சொல்லாமல் இப்பொழுதும் அநேக அந்திக் கிறிஸ்துகள் இருக்கிறார்கள் என்று சொல்கிறார். வருவான் என்ற வதந்தியை நம்ப வேண்டாம், இப்பொழுதும் இருக்கிறார்கள் என்று நம்ப வேண்டும் என்று ஆவியானவர் சொல்லுகிறார். ஆகவே, அந்திக் கிறிஸ்து என்றால் கிறிஸ்துவைப் போல வேஷம் தரித்துக்கொண்டு கிறிஸ்துவின் உபதேசத்திற்கு எதிராக போதிப்பவன். இப்படிப்பட்டவர்கள் முதல் நூற்றாண்டிலே இருந்ததுபோல இந்த நூற்றாண்டிலும் இருக்கிறார்கள். இனிமேல் வருவான் என்ற வதந்தியை நம்பாமல், இப்பொழுதும் இருக்கிறார்கள் என்பதை நம்பவேண்டும்.

## II அந்திக் கிறிஸ்து யார்?

அந்திக் கிறிஸ்து யார் என்பது குறித்து அநேகருக்கு குழப்பமாக உள்ளது. ஏனென்றால், அந்திக் கிறிஸ்து பற்றிய வதந்திகளும், மனிதக் கற்பனைகளுமே குழப்பத்திற்குக் காரணம். நாம் குழப்பமடையாமலிருப்பதற்கு அப்போஸ்தலன் யோவான் தெளிவுபடுத்துகிறார்.

### 1. பிரிந்து போனவர்கள்

அவர்கள் (அந்திக் கிறிஸ்துகள்) நம்மை விட்டுப் பிரிந்து போனார்கள் ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களாயிருக்கவில்லை நம்முடையவர்களாயிருந்தார்களானால் நம்முடனே நிலைத்திருப்பார்களே, எல்லாரும் நம்முடையவர்களல்ல வென்று வெளியாகும்படிக்கே பிரிந்துபோனார்கள் என்று தெளிபடுத்தினார். (1 யோனா 2:18,19). பிரிந்து போகிறவன் தன் இச்சையின்படி செய்யப்பார்க்கிறான் எல்லா ஞானத்திலும் தலையிட்டுக் கொள்ளுகிறான் என்று ஞானி சாலமோன் கூறுகின்றார் (நீதி. 18:1) பிரிவினை என்பது பாவச் செயல் அதைக் கர்த்தர் வெறுக்கிறார் (நீதி. 6:16,19).

சபையில் பிரிவினை கூடாது, எல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏக மனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன் என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகின்றார் (1 கொரி. 1:10) ஆனாலும், கொரிந்து பட்டணத்திலுள்ள சபையாரிடத்தில் பிரிவினை இருந்தது. (1 கொரி. 1:12,13). நாம் பிரிவினைகளில்லாமல் ஒரே காரியத்தைப்பேச, செயல்பட தேவன் ஏழு ஒன்றுகள் வைத்திருக்கின்றார். அது ஒரே நம்பிக்கை, ஒரே சரீரம் (ஒரே சபை) ஒரே ஆவி, ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரே தேவன் என்று ஒற்றுமைக்கான வழியை வைத்துள்ளார் (எபே. 4:4,6). இதில் பிரிவினை ஏற்படுத்துகிறவர்களே அந்திக் கிறிஸ்துகள் ஆவார்கள். அவர்கள் பிரிந்து போய் ஆரம்பத்தில் கிறிஸ்துவின் சபை என்று பெயர் வைத்து நடத்தியிருப்பார்கள். இது நாளடைவில், கத்தோலிக்கமாகவும், புராட்டஸ்டண்டுகளாகவும், பெந்தெகொஸ்தேக்களாகவும் மாறிப்போனது. இப்படி பிரிந்துபோனவர்களே அந்திக் கிறிஸ்து.

### 2. மறுதலிக்கிறவன்

அந்திக் கிறிஸ்து யார் என்பதை அப்போஸ்தலனாகிய யோவான் தெளிவுபடுத்துகிறார். இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனே

யல்லாமல் வேறே யார் பொய்யன்? பிதாவையும், குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக் கிறிஸ்து என்று தெளிவுபடுத்துகின்றார் (1 யோவான் 2:22). முதல்நூற்றாண்டில் இயேசுவை மேசியாவாக, கிறிஸ்துவாக ஏற்றுக் கொள்ளாத விசுவாசியாத யூதர்கள் இருந்தனர். அவர்களில் பரிசேயன், வேதபாரகர், சதுசேயர் இருந்தனர். அவர்கள் இயேசுவைக் கிறிஸ்துவாக ஏற்றுக்கொள்ளவில்லை. இயேசு நான் தான் கிறிஸ்து என்று சொன்னதை விசுவாசியாத யூதர்கள் அவரைப் பிடித்து சிலுவையில் அறையும்படிச் செய்தனர் (லூக். 23:1,2) அவர் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளிலே சரீரத்தோடு உயிர்த்தெழுந்து நான் தான் கிறிஸ்து என பலமாய் நிரூபித்துக் காட்டினார் (லூக். 24:1,6; ரோம 1:5) இதை மறுதலிக்கிறவன் அந்திக் கிறிஸ்து அவன் பொய்யன் என்றார் யோவான்.

அடுத்து பிதாவையும், குமாரனையும் மறுதலிக்கிறவன் அந்திக்கிறிஸ்து என்றார் (1 யோவான் 2:22) தேவத்துவத்தில் பிதாவும், குமாரனும் சமமாக இருக்கின்றார்கள் (பிலி. 2:6). இதை மறுதலிக்கிறவன் அந்திக்கிறிஸ்து. குமாரனை மறுதலிக்கிறவன் பிதாவையுடையவனல்ல (1 யோவான் 2:23).

### 3. இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாதவன்

மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல. வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக் கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே. அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது. மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத அநேகர் உலகத்திலே தோன்றியிருக்கிறார்கள். இப்படிப்பட்டவனே வஞ்சகனும் அந்திக் கிறிஸ்துவுமாயிருக்கிறான் (1 யோவான் 4:3; 2 யோவான் 7) இந்த இரண்டு வசனப்பகுதிகளிலும் கள்ளப் போதகர்களைக் குறித்து அப்போஸ்தலனாகிய யோவான் கூறுகின்றார். இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத கள்ளப் போதகர்களே அந்திக் கிறிஸ்துக்களாக இருக்கிறார்கள்.

எருசலேம் அழிவுக்கு முன்னதாக சில அடையாளங்கள் காணப்படும். அந்த அடையாளத்தை வைத்து அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் எழும்பி அநேகரை வஞ்சிப்பார்கள். அந்த அடையாளங்கள் நடைபெறும் பொழுது இதோ கிறிஸ்து இங்கே இருக்கிறார். அதோ அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள். ஏனெனில், கள்ளக் கிறிஸ்துக்களும், கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத் தக்கதாகப் பெரிய அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்வார்கள் இதோ முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன் என்று இயேசு கிறிஸ்து தமது சீஷர்களுக்கு அறிவித்தார் (மத். 24:11,25). அதன்படியே முதல் நூற்றாண்டிலே அந்த வஞ்சகர்கள், கள்ளப்போதகர்கள், கிறிஸ்துவின் வேஷத்தைத் தரித்துக் கொண்டு இருந்தார்கள்.

விசுவாசியாத யூதர்கள் இயேசுவை கிறிஸ்து என்று அறிக்கை பண்ணக் கூடாது என்று கடுமையான தடைச்சட்டம் போட்டிருந்தனர் (யோவான் 9:22; அப். 4:18) இதுவே அநேகங் கள்ளக்கிறிஸ்துக்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்புவதற்குக் காரணமாயிற்று, கி.பி. 70ல் எருசலேம் அழிக்கப்படும் பொழுது இயேசு சொன்ன அடையாளங்கள் நடந்தன. பூமி அதிர்ச்சியையும், யுத்தங்களும்,

பஞ்சங்களும், கொள்ளை நோயும் இன்னும் அநேக அடையாளங்களும் நடந்தன. அதை முன்னிட்டு நான் தான் கிறிஸ்து என்று அநேகர் எழும்பினார்கள்.

இதன் காரணமாக அநேகர் வஞ்சிக்கப்பட்டார்கள் இயேசுவை கிறிஸ்து என்று அறிக்கையிட வஞ்சிக்கப்பட்டனர்! இப்படி நடந்து கொண்டிருக்கும் பொழுது தான் யோவான் அப்போஸ்தலர் இயேசுவை கிறிஸ்து என்று அறிக்கை பண்ணாத எந்த ஆவியையும் நம்ப வேண்டாம். அதுவே அந்திக் கிறிஸ்துவின் ஆவி என்று எச்சரிக்கை செய்து எழுதுகிறார்.

இன்றைய நாளிலும் இயேசுவை தீர்க்கதரிசி என்றும், அவர் நல்லவர் என்றும் அநேகர் விசுவாசிக்கின்றனர். குறிப்பாக, இஸ்லாமியர் ஏற்றுக் கொள்ளுகின்றனர். ஆனால், அவர் தான் மேசியா அதாவது கிறிஸ்து என்று ஏற்றுக் கொள்ளுவதில்லை அறிக்கை பண்ணுவதில்லை! அவர்கள் யாவரும் அந்திக் கிறிஸ்துவால் வஞ்சிக்கப்பட்டவர்களே!

### III வெளிப்படுத்தின விசேஷமும் அந்திக் கிறிஸ்துவும்

அந்திக் கிறிஸ்துவைப் பற்றி யோவான் அப்போஸ்தலன் தெளிவாக அறிந்திருந்தார். அதை முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களும் தெளிவாக எழுதிவிட்டார் என்பதை நாம் அறிந்து கொண்டோம். அநேகர் அந்திக் கிறிஸ்து பற்றி நிறைய கற்பனை செய்து வைத்திருக்கின்றனர். அதில் வெளி. 11:7ல் பாதாளத்தி லிருந்து வந்த மிருகத்தைப் பற்றி கற்பனை செய்துவைத்திருக்கின்றனர். இந்த மிருகம் அந்திக் கிறிஸ்து என்று சொல்லுகிறார்கள். வெளிப்படுத்தின விசேஷத்தில் மூன்று மிருகங்களைப் பற்றி சொல்லப்படுகிறது. ஆனால், இதில் எந்த மிருகமும் அந்திக் கிறிஸ்து என்று சொல்லவில்லை. அந்திக் கிறிஸ்து என்ற வார்த்தை வெளிப்படுத்தின விசேஷத்தில் ஒரு இடத்திலும் இடம் பெறவில்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள். மனிதனுடைய கற்பனைகளுக்கும், யூகங்களுக்கும், போதனைகளுக்கும் நாம் இடமளிக்காமல் இருப்போமாக. வேத வசனங்களோடு, எதையாகிலும், கூட்டுவதோ, குறைப்பதோ பெரும் தண்டனைக்குரியதாகும். (வெளி. 22:18,19).

(தொடரும்)

## வேதாகமத்தில் சபை உறுப்பினர்கள் பின்வரும் பெயர்களால் அழைக்கப்படுகிறார்கள்

| | |
|---|---|
| அங்கத்தினர்கள் | 1 கொரி. 12:27 |
| சீஷர்கள் | அப். 6:1 |
| விசுவாசிகள் | அப். 5:14; 6:15 |
| பரிசுத்தவான்கள் | அப். 9:13, ரோ. 1:7 |
| ஆசாரியர்கள் | 1 பேதுரு 2:9, வெளி. 1:16 |
| கிறிஸ்தவர்கள் | அப். 11:26, 26:28, 1 பேதுரு 4:16 |

# விசுவாசம்
# நம்முடைய ஜெயமாயிருக்கிறது

*Randall Caseman*

" நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் " (1 யோவான் 5:4) " விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவை களின் நிச்சயமுமாயிருக்கிறது " (எபி. 11:1). ஒரு மொழியாக்கம் இவ்விதமாகச் சொல்கிறது. " விசுவாசமானது நம்பப் படுகிறவைகளின் நிச்சயமும், காணப்படாத வைகளின் உறுதியாயிருக்கிறது ". இன்று மத உலகில் விசுவாசத்தைப் பற்றி அதிகமாக பேசப்படுகிறது. விசுவாசம் என்பது என்ன? எது விசுவாசமல்ல என்பது பற்றி பரவலாகப் பேசப்படுகிறது. கிறிஸ்தவர்களாக இந்த பாடத்தைப் பற்றி நாம் புரிந்து கொள்வது முக்கியமானதாகும்.

தேவனைப் பற்றிய அறிவுதான் விசுவாசம் தேவனை அறியாமல் எந்த வேதாகம விசுவாசமும் இருக்க முடியாது. அறியாமை என்பது விசுவாசத்திற்கு எதிர்மறையானதும், சத்துருவுமாக இருக்கிறது. அறிவின் விளைவுதான் நம் விசுவாசம். " ஆதலால், விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனு டைய வசனத்தினாலே வரும் " (ரோமர் 16:17). அவர் உண்டென்று நாம் விசுவாசிக்க வேண்டுமென்று (எபி. 11:6) சொல்கிறது. தேவன் மீது விசுவாசமில்லாமல் உண்மையான வெற்றிகரமான வாழ்க்கை வாழ்வது என்பது முடியாத காரியம் அதை முயற்சி செய்து கூட பார்க்க வேண்டாம்.

**மனரீதியாக ஏற்றுக்கொள்வது தான் விசுவாசம் :** விசுவாசம் என்பது தேவனை தேவனாகவும், எல்லாவற்றையும் விட உயர்ந்தவர், இப்பிரபஞ்சத்தை சிருஷ்டித்தவர், ஜீவனைத் தருபவர், இரட்சிப்பைத் தருபவர் என ஒத்துக் கொள்வதாகும். " ஆதியிலே தேவன் சிருஷ்டித்தார் (ஆதி. 1:1) அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம் (அப். 17:28). " தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் " (யோவான் 3:16). அநேகர் தேவனை அறிந்திருக் கிறார்கள். ஆனால், அவரை எல்லாவற்றையும் விட மேலானவர், சர்வ அதிகாரம் படைத்தவர் என்பதை ஏற்றுக் கொள்ள தவறுகிறார்கள்.

**தேவனுடைய வாக்குத்தத்தத்தில் நம்பிக்கை வைப்பது தான் விசுவாசம் :** இங்கே தான் நம்மில் அநேகர் தவறுகிறோம். நமக்கு வேதாகமம் தெரியும், நாம் நம் உதடுகளினால் தேவனை சர்வ அதிகாரம் உடையவர் என்பதை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், நம் இருதயங்களினால் அவரை நம்புகிறோமோ என்பதைக் குறித்து நிச்சயமில்லாமல் இருக்கிறோம். "அவர்கள் தங்கள் உதடுகளினால் என்னை கனப்படுத்துகிறார்கள், அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாயிருக்கிறது " (மத். 15:8). ஆம், நோவாவின் இரட்சிப்பு, ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள், இஸ்ரவேலின் விடுதலை, தாவீதின் நம்பிக்கை,

எலியா காகங்களால் போஷிக்கப் பட்டது, கலிலேயக் கடல் அமர்த்தப்பட்டது பற்றி எல்லாம் நமக்குள் தெரியும். ஆனால், தேவன் நம் ஜீவியங்களில் கிரியை செய்ய அவரை அனுமதிப்பதில் நாம் குறைவுபடுகிறோம். விசுவாசம் என்பது நமது அன்றாட வாழ்க்கையில் தேவனை நம்புவதாகும். நண்பர்களே, தேவன் நம்முடைய எல்லாவற்றையும் முடிவு பரியந்தம் பார்ப்பார். எனவே, அவரை நம்புங்கள். " அவர் தம்மைத் தேடுகிற வர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும் " (எபி. 11:6).

**கீழ்ப்படிவது தான் விசுவாசம் :** எப்போதாவது, வேதாகமத்தை வாசிப்பவர் கூட விசுவாசமானது தேவனுடைய சித்தத்தின்படி செயல்பட அது ஏவப்படாத வரை அது முழுமையாவதில்லை என்பதை அறிவார். விசுவாசத்தி னாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேலான பலியை செலுத்தினான் (எபி. 11:4). விசுவாசத்தினாலே ஏனோக்கு தேவனோடு நடந்தான் (எபி. 11:5). விசுவாசத்தினாலே நோவா பேழையை உண்டு பண்ணினார் (எபி. 11:7). விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் அழைக்கப்பட்ட போது கீழ்ப்படிந்தான் (எபி. 11:8). நாம் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் (எபேசியர் 2:8). கிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்தார், ஆனால், எல்லோருமே இரட்சிக்கப்படமாட்டார்கள். உலகம் முழுவதற்குமான இரட்சிப்பு என்று வேதாகமத்தில் எதுவும் போதிக்கப் படுவதில்லை. எல்லோரும் என்ன செய்யும் படியாக கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்களோ அதையே நாம் தனிப்பட்ட முறையில் செய்ய வேண்டும். தேவனுடைய சித்தத்திற்கு நம்மை கீழ்ப்படுத்த வேண்டும். இதை இயேசு சிறப்பாக சொன்னார். " நான் என் பிதாவின் சித்தத்தைச் செய்ய வந்தேன். யாக்கோபு இவ்விதமாகச் சொல்கிறார் கிரியை இல்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது " (யாக். 2:17). பிசாசுகள் தேவனைப் பற்றி அறிந்திருக் கின்றன, தேவனை எல்லாவற்றையும் விட மேலானவராக ஒத்துக்கொள்கின்றன. தேவனுடைய வார்த்தையில் அவைகளுக்கு நம்பிக்கை உண்டு. ஆனால், தேவனுடைய கற்பனைகளை அவைகள் கைக்கொள்வதில்லை. கீழ்ப்படிதலு மில்லை, நறுங்குண்ட இருதயமுமில்லை. நாம் வேதாகமத்தை வாசித்து விட்டு விசுவாசம் செயல்படுகிற விசுவாசமாக இருக்கிறது என்பதைக் காணாமல் இருக்க முடியுமா? " இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான். நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூருவதாம். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் " (1 யோ. 5:1,3,4).

**பாவக்குற்றத்தின் மீது விசுவாசம் நம் ஜெயமாக இருக்கிறது.** "அவர்கள் இருளை விட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தை விட்டு தேவனி டத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண் களைத் திறக்கும் பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் " என்றார் (அப். 26:18).

**சோதனையின் மீது விசுவாசம் நம் ஜெயமாக இருக்கிறது.** "எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள் " (எபே. 6:16).

**அறியாமையின் மீது விசுவாசம் நம் ஜெயமாக இருக்கிறது** " கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத் தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும் " (தீமோ. 3:15).

**பொறுமை இல்லாமை மீது விசுவாசம் நம் ஜெயமாக இருக்கிறது.** " உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்கு மென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள் " (யாக். 1:3).

**ஜெபத்தில் விசுவாசம் நம் ஜெயமாக இருக்கிறது** " அவர் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் " என்றார் (அப். 26:18).

## அதிகமாகச் செய்யுங்கள்

இருப்பதை விட அதிகமாகச் செய்யுங்கள்
- அதாவது, வாழுங்கள்

தொடுவதை விட அதிகமாகச் செய்யுங்கள்
- அதாவது, உணருங்கள்

பார்ப்பதை விட அதிகமாகச் செய்யுங்கள்
- அதாவது, கவனியுங்கள்

வாசிப்பதை விட அதிகமாகச் செய்யுங்கள்
- அதாவது, உள்வாங்குங்கள்

கேட்பதை விட அதிகமாகச் செய்யுங்கள்
- அதாவது, செவிகொடுங்கள்

கவனிப்பதை விட அதிகமாகச் செய்யுங்கள்
- அதாவது, புரிந்து கொள்ளுங்கள்

யோசிப்பதை விட அதிகமாகச் செய்யுங்கள்
- அதாவது, ஆழ்ந்து சிந்தியுங்கள்

பேசுவதை விட அதிகமாகச் செய்யுங்கள்
- ஏதாவது உருப்படியாகச் சொல்லுங்கள்


# BIBLE MEDITATION

## TV PROGRAM





## நாளும், நடப்பும்


1. காவிரி – உச்சநீதிமன்றத் தீர்ப்புக்குக் கட்டுப்படுவோம் – கர்நாடக முதல்வர்
2. ஐரோப்பிய யூனியனுக்கு அமைதிக்கான நோபல் பரிசு
3. டெங்கு காய்ச்சல் : கொசு ஒழிப்புப் பணிக்கு ரூ. 2.5 கோடி ஒதுக்கீடு
4. இந்தியாவில் முதலீடு செய்ய முன்வர வேண்டும் – மத்திய அமைச்சர் சல்மான்
5. மத்திய அரசுத் திட்டங்களை மாநில அரசு தடை செய்வது அபாயகரமானது – M.M. ஜோஷி
6. T20 உலகக் கோப்பையில் மேற்கிந்திய தீவுகள் அணி கோப்பையைத் தட்டிச் சென்றது.



**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**


| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |







Regd. News Paper RNI No. 47661/87
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month

Licensed to Post without pre payment.
No. TN / WR / ERD / 03 / WPP / 2012-2014






# திருமறை தியானம்


## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்


| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | ஞாயிறு | இரவு | 10:00 | மணி |
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |


தபால் செலவிற்கு பணம் அனுப்பி
இந்நூலகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

கீழ்க்கானும் கைப்பிரதிகள் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.









## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor: S. Rajanayagam